பக்கங்கள்: 12 + VI=பதினெட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 25 வியாழக்கிழமை (10-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:225

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அழகிய முகப்புத் தோற்றம் இது. இந்த ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் இன்று நிகழ்கின்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதர் கோபுரம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பரிபாரகர் கோவில்களுக்கு இன்று கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறவுள்ளது. (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.)

வரதர் அணி உறுப்பினருக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை10

கத்திவெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஈபிஆர்எல்எவ் வரதர் அணி உறுப்பினருக்கு விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் யாழ். நகரப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் இவரது கைகளில் வெட்டிக் காயப்படுத்தியிருந்தனர். பலத்த காயமடைந்த நிலையில் இவர் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரது உடலில் இருந்து அதிக இரத்தம் வெளியேறியிருப்பதால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் கடலில் எண்ணெய் வளம் வெளிநாட்டு ஆய்வுகளில் உறுதி

நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஜயசூரிய தகவல்

கொழும்பு,ஜுலை10

இலங்கையின் மன்னார் கடற்பிராந்தியம் உட்பட மேற்கு கடற்பிராந்தியத்தில் எண்ணெய் படிமங்கள் காணப்படுகின்றன என்பது கண்டறியப்பட்டிருக்கிறது என்று எரிபொருள், எரிசக்தி அமைச்சர் கருஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாட்டு ஆய்வுகள் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகிறது. என்றும் அமைச்சர் கூறினார்.

எண்ணெய்வள ஆய்வு பற்றிய சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அமைச்சர் ஜயசூரிய இவற்றைத் தெரிவித்தார்.

இந்த எண்ணெய் வளம் சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்படுமேயானால் எரிபொருளுக்கான இன்றைய செலவில் 10 வீதத்தை மீதப்படுத்தமுடியும் என்றும் அமைச்சர் சொன்னார்.

மேற்கு கடற்பிராந்தியத்தில் எண்ணெய் வளம் உள்ளது என்பதை சிவதேச விஞ்ஞானிகள் சங்கமும் ஊர்ஜிதம் செய்துள்ளது எனவும் குறிப்பிட்ட அமைச்சர், இருந்தபோதிலும் எரிபொருள் வளங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் இலங்கை அரசு முதலீடு செய்ய முடியாதிருப்பதாகவும் புதிய சட்டமூலத்தின் மூலம் வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

மாத இறுதியில் புலிகளுடன் பேச்சு தொடங்கும் என்று அரசு நம்பிக்கை

புதிய யோசனைகள் இவ்வாரம் புலிகளிடம் கையளிக்கப்படும் என்கிறார் பிரட்மன்

கொழும்பு,ஜுலை10

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை இம்மாத இறுதியில் மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதேவேளை, வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய யோசனைகளை அரசாங்கம் இவ்வாரத்தில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் வெளிநாட்டு செய்தி நிறுனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்திருக்கும் பிரட்மன் வீரக்கோன், "நாம் தடைகளைத் தாண்டும் ஒரு நிலையை நெருங்கிவிட்டோம்" எனவும் கூறியிருக்கிறார்.

"அறிகுறிகள் வெகு சாதகமானவையாக உள்ளன. பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு காலம் இப்பொழுது கனிந்துவிட்டது" எனவும் பிரதமரின் செயலாளர் வீரக்கோன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

குரங்குபாஞ்சான் பகுதி விடயத்தில் கண்காணிப்புக்குழு முயற்சி தோல்வி

கிணியா குரங்குபாஞ்சான் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் முகாமைக் கைவிடுமாறு கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிஸ்சன் படையதிகாரிகள் சகிதம் சென்று புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளர் திலக் பதுமன் ஆகியோருடன் பேசினர்.

குரங்குபாஞ்சான் பகுதி தங்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள பகுதி என்றும் அதை விட்டுக்கொடுக்க முடியாது என்றும் புலிகள் தெரிவித்தனர். வேறு வழியின்றி புலிகளின் தலைமையுடன் பேசி முடிவு எடுப்பதாகக் கூறி கண்காணிப்புக் குழுத் தலைவர் படையதிகாரிகளுடன் திரும்பினர்.

யு.எஸ். எய்ட் குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம்,ஜுலை10

யுஎஸ் எய்ட் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ் வந்தது. இவர்கள் நேற்றுக் காலை யாழ் செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அரச அதிபரின்கீழ் வரணி 'பாம்'

(12 ஆம் பக்கம் பார்க்க)

காட்டுமிராண்டித்தனமான கொலைகள் அதிகரிப்பு

சிறையிலிருந்து வீடு திரும்பிய தந்தை மகனின் தலையை சீவிக்கொன்றார்!

ஆனைக்கோட்டையில் பயங்கரம்

யாழ்ப்பாணம்,ஜுலை10

சிறையிலிருந்து பிணையில் விடுதலையாகி வீடு திரும்பிய தந்தை ஒருவர் தனது பிள்ளைகளைக் கொன்றொழிக்க முயன்றுள்ளார். வெறிபிடித்த அந்தத் தந்தையின் கையில் சிக்கிய 15 வயது மகன் கோரமாகத் தலை வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தப் படுபயங்கரச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

நீண்ட நாள்கள் யாழ்.சிறையில் தடுத்துவைக்கப்பட்டபின் நேற்று நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட பஞ்சாட்சரம் ஸ்ரீகாந்தன் (காந்தன், வயது 34) என்ற தந்தையே பெற்ற மகனைக் கோரமாக வெட்டிக் கொன்றிருக்கிறார். 15 வயதுடைய ஸ்ரீகாந்தன் தயாளன் என்ற சிறுவனே தந்தையின் கோரத் தாண்டவத்தில் பலியாகியுள்ளான்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நீண்டகாலமாகக் கோப்பாயில் வசித்துவந்த பஞ்சாட்சரம் ஸ்ரீகாந்தன் (காந்தன், வயது 34) என்ற இந்தப் பிள்ளைகளின் தந்தை கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் குடும்பத்துடன் குடியமர்ந்திருந்தார்.

குற்றச்செயல் ஒன்றுக்காக கடந்த சில நாள்களுக்கு முன்னர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஸ்ரீகாந்தன் நேற்று யாழ்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை அவரது மனைவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

தந்தையின் வெறியாட்டத்தில் பலியான மகனின் சடலம் வீட்டின் அருகே கிடப்பதை படத்தில் காணலாம் (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

வன்னிக்கு எரிபொருள் எடுத்துவர அரச அதிபர்களின் அனுமதி வேண்டும்!

புதிய நடைமுறை அமுலுக்கு வருகின்றது

வவுனியா,ஜுலை10

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எரிபொருள் எடுத்துச் செல்வதற்கு இனிமேல் வன்னிப் பகுதி அரச அதிபர்களின் அனுமதி பெறப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் வவுனியாவில் நிலைகொண்டுள்ள படையினரின் அனுமதி பெற்றே வன்னிக்கு எரிபொருளாகள் எடுத்துச் செல்லப்பட்டுவந்தன.

பின்னர் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வவுனியா மாவட்ட அரச அதிபரின் அனுமதியுடன் எரிபொருள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பொது யோசனைகள் முன்வைக்கப்படும்

வடக்கு,கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் கூடி தீர்மானம்

கொழும்பு,ஜுலை10

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பொதுவான யோசனைகளை முன்வைப்பதென்று வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த யோசனைகளில் முன்வைக்கப்படவேண்டிய விடயங்கள் பற்றி இரண்டொரு தினங்கள் கூடி ஆராய்ந்து முடிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானங்கள் குறித்து தேசிய ஐக்கிய முன்னணியின் (ருஎ) பிரதித் தலைவரான எம்.எல் ஏ.எம். ஹரிஸ் புல்லாஹ் எம்.பி. நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாக வடக்கு-கிழக்கு முஸ்லிம் எம்பிக்கள் நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தை இராணுவம்தான் பெரிதுபடுத்துகின்றது

தென்னாபிரிக்க பாதுகாப்பு ஆலோசகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை10

உயர் பாதுகாப்பு வலயம் என்பது யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளில் ஒரு சாதாரண விடயமாகக் கருதப்பட்டு வருகின்றது. இலங்கையில் தான் இராணுவம் இதனை பெரிய தொரு பிரச்சினையாக மாற்றியுள்ளது.

-இவ்வாறு நேற்று பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்ற 'சமாதான முயற்சிகளில் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள்' தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தென்னாபிரிக்க முன்னாள் இராணுவ அதிகாரியும் தேசிய காங்கிரஸின் பாதுகாப்பு ஆலோசகருமான கலாநிதி றொக்கி வில்லியம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உலகத்தில் பல நாடுகளில் நான் பணியாற்றியுள்ளேன். அங்கெல்லாம் ஒரு சிலர் மட்டும்தான் சமாதானத்தை விரும்புவதில்லை. அவர்களை மன நோயாளர் என்றே கருதவேண்டும். பல நாடுகளில் இந்த உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை ஒரு சாதாரண விடயமாகத்தான் உள்ளது. இங்கு தான் அதனை ஒரு பெரிய பிரச்சினையாக இராணுவம் மாற்றியுள்ளது. மக்களுடைய வாழ்க்கைக்குத் தடையாக உயர் பாதுகாப்பு வலயம் அமையக் கூடாது. இராணுவம் இதனைக் கூடிய கவனத்தில் கொள்ளவேண்டும். முரண்பாடுகளுக்கு அரசியல் தீர்வொன்று கிட்டும் போது இந்த உயர் பாதுகாப்பு வலயம் என்பது இல்லாமல் போய் விடும்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு சரியான தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம், விடுதலைப் புலிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்புடன் ஒரு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். தென்னாபிரிக்காவிலும் 1994ஆம் ஆண்டு சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே ஆயுதக்கையளிப்பு நடைபெற்றது. இந்திய இராணுவ அதிகாரி நம்பியார் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சமர்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கனரக ஆயுதங்களை கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பில் வைக்கவேண்டும் என்ற கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் தான் அப்படியானதொரு நிலை சாத்தியமாகும்.

பொதுமக்களுடன் இராணுவம் நல்லுறவைப் பேணவேண்டும். அப்போதுதான் பிரச்சினைகளுக்குச் சுமுகமான முறையில் தீர்வை எட்டமுடியும் - என்றார் அவர்.

இச்செயலமர்வில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதி சு.பரமநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:-

அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னர், உயர்பாதுகாப்பு வலயம் - என்று ஒன்றை வைத்திருக்க முடியாது. எனினும், இங்கு அதற்குப் பதிலாக புதிய உயர்பாதுகாப்பு வலயங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இடம்பெயர்ந்தவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்க அவர்களது சொந்த வாழ்விடங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

இதற்குத் தீர்வு காணும் பொருட்டு பாதுகாப்பு நிலைகளில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். மனித உரிமை தொடர்பான சரத்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டும் - என்றார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகர கருத்துக் கூறுகையில்:-

அரசாங்கத்தின் வாப்புச் சட்டத்தின் பிரிவு 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சகலருக்கும் சுதந்திரமாக நடமாடும் உரிமையுண்டு. எனினும், உயர் பாதுகாப்பு இங்கு இதற்கு தடையாக உள்ளது. எனவே, அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் ஏற்பட்டுள்ளது -என்றார்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் கி.வி.கே. சிவஞானம் உரைநிகழ்த்துகையில்:-

நாம் ஆரம்பத்திலிருந்தே சமஷ்டி ஆட்சியையே அரசிடம் கேட்டு வந்தோம். அதனைத் தமிழர்கள் தனிநாடு கேட்கிறார்கள் என்று கோஷித்தது சிங்கள இனவாதம் தான். இப்போது இடைக்கால நிர்வாகம் ஒன்றை நாம் கேட்கும்போதும் அதை தனிநாடு கேட்கிறார்கள் என்று சிங்கள இனவாதிகள்தான் கூக்குரலிடுகிறார்கள். சமஷ்டி ஆட்சியை தலைவர் பிரபாகரன் பரிசீலிப்பதாகக் கூறியபோதும், அதை தனிநாடு என்கிறார்கள் சிங்களவர். நாம் தனிநாட்டைப் பற்றி சிந்திக்கவுமில்லை, கேட்கவுமில்லை. சிங்கள இனவாதிகள்தான தனிநாடு கேட்கும்படி எம்மைத் தூண்டுகிறார்கள் -என்றார்.

நேற்றுக் காலை 9மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்ற இச்செயலமர்வில் நைஜீரியாவைச் சேர்ந்த கவடோ பெமி, யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, தென்னந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு. எஸ். நேசகுமார், பலாலி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் ஜெயசுந்தர, மேஜர் செனிவிரட்ண, விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த சுதா, இனியவன் மற்றும் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு.சி.ஜி.ஜெயக்குமார், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி அருட்திரு. ஏ.ஜ.போனாட், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(எ-8)

வெலிமடையில் மாணவனைப் பிடித்து பலவந்தமாகக் கிருமிநாசினி பருக்கினர்!

வானில் வந்தோர் கைவரிசை; பொலீஸ் விசாரணை

பதுளை,ஜூலை10

இலக்கத் தகடுகளற்ற டெலிகா ரக வானில் வந்தவர்கள், பாடசாலை சென்று கொண்டிருந்த ஒரு மாணவனைப் பிடித்து பலாத்காரமாகக் கிருமிநாசினியைப் பருக்கிவிட்டுச் சென்ற சம்பவம் ஒன்று வெலிமடையில் இடம்பெற்றுள்ளது.

நுகத்தலாவை மகா வித்தியாலயத்தில் ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் டி.ஜே.எம்.ரெங்க என்ற மாணவனுக்கே கிருமிநாசினி பருக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாயன்று இச்சம்பவம் நடைபெற்றது.

கிருமிநாசினி பருக்கப்பட்ட இம் மாணவன் பாடசாலைக்குச் சென்றதும், மயங்கி விழவே, ஆசிரியர்களும், உயர்தர வகுப்பு மாணவர்களும், அம்மாணவனுக்கு முதலுதவிச் சிகிச்சைகளை மேற்கொண்டனர். பின்னர் வெலிமடை அரசினர் மருத்துவமனையில் சேர்த்தனர். மாணவனின் உடல் நிலை தற்போது தேறிவருவதாக, மருத்துவமனை வட்டாரங்களிருந்து அறியவருகின்றது.

வானில் வந்த மூன்று பேர் முகமூடி அணிந்திருந்ததினால், அவர்களை அடையாளம் காணமுடியவில்லை என்றும்-

என்ன காரணத்தினால் கிருமிநாசினி பருக்கினார்கள் என்பது பெரும் புதிராக இருக்கின்றது என்றும், குறிப்பிட்ட வானில் இலக்கத்தகடுகள் இருக்கவில்லை என்றும்-

அம் மாணவன், வெலிமடைப் பொலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளான்.

வெலிமடைப் பொலீஸ் பொறுப்பதிகாரி பண்டார ரட்ணாயக்க, மேற்படிச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

(எ)

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல்

வவுனியா-கொழும்புக்கு இடையிலான 'இன்டர் சிட்டி' ரயில்சேவை நிறுத்தம்

வருமானம் குறைவே காரணமாம்!

கொழும்பு,ஜூலை10

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையிலான 'இன்டர் சிட்டி' கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 14 ஆம் திகதிமுதல் இடைநிறுத்தப்படும். ரயில்வே திணைக்களம் இதனை குறிப்பிட்டு வவுனியா ரயில் நிலைய அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறது.

இந்த ரயில் சேவை நஷ்டத்தில் இயங்குவதே சேவை இடைநிறுத்தப்படுவதற்கான காரணம் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆயினும், இந்த ரயிலுக்கான கட்டணம் 200 ரூபாவிலிருந்து 270 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதும் சேவையில் ஏற்படும் காலதாமதங்களுமே ரயில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்கான காரணங்களாகும் என்று ரயில் சேவையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(எ)

அடிப்படை வசதி கோரி மாணவர்கள்

காத்தான் குடியில் ஆர்ப்பாட்டம்: வீதிப் போக்குவரத்துகள் பாதிப்பு!

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச பாடசாலைகளினதும், வைத்தியசாலைகளினதும் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்று வலியுறுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் நேற்றுக்காலை காத்தான் குடியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி மகா வித்தியாலயம், மீரா மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் காத்தான்குடி பிரதேச செயலாளர் அலுவலகம் எதிரே இந்த ஆர்ப்பாடத்தை நடத்தினர்.

காலை 9மணியளவில் பிரதேச செயலாளர் அலுவலகம் எதிரே திரண்ட மாணவர்கள் சுமார் ஒரு மணிநேரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணப் பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பனவற்றின் அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கம் அலட்சியமாக நடந்துகொள்கிறது என்று குற்றஞ்சாட்டிய மாணவர்கள், தமது பிரதேசக் கல்வி, சுகாதாரச் சேவை அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

(எ)

யாழ்.பெருமாள் கோவிலில் இன்று மஹாகும்பாபிஷேகம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9.29மணி தொடக்கம் 10.53 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

காலை 6.00மணிக்கு புண்யாகவாசனம், விஷ்வரூபதரிசனம், ஜயாதி ஹோமம் ஆகியவற்றுடன் இன்றைய கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். காலை 9மணி29நிமிடம் தொடக்கம் ஸ்தூபிகள் அபிஷேகம், பிரதான கும்பங்கள் வீதியுலா வருதல், ராஜகோபுரங்கள் கும்பாபிஷேகம் என்பன நடைபெற்று 10மணி53 நிமிடத்திற்குள் மகாகும்பாபிஷேகம் இடம்பெறும்.

சிவாகம கிரியா தத்துவநிதி பிரம்மஸ்ரீ சாமிநட்ண சுந்தரேசக் குருக்கள் பிரதிஷ்டா பீரதம குருவாக இருந்து கிரியைகளை நிறைவேற்றுவார். ஈழத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சிவாசாரியர்களும் கும்பாபிஷேக நிகழ்வில் பங்குகொள்கின்றனர்.

கும்பாபிஷேகத்தின் பூர்வாங்கக் கிரியைகள் கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வந்தன. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நண்பகல் 12மணியுடன் நிறைவடைந்தது.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் எண்ணெய்க்காப்புச்சாத்தும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(எ-15)

கரிநாள் அனுஷ்டிக்க பொ.ஐ.மு. எம்.பிக்கள் முடிவு

கொழும்பு,ஜூலை10

தேசிய கரிநாள் அனுஷ்டிப்பதென பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்திருக்கிறது. நாட்டில் நடைபெறும் கொலைகளுக்கு எதிராக கரிநாள் அனுஷ்டிப்பதென கடந்த திங்களன்று கூடிய கூட்டத்தில் இந்த எம்.பிக்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இந்த எதிர்ப்பு நாளுக்கான திகதியைத் தீர்மானிப்பதும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

(எ)

யுவதியைக் கடத்தியோர் எச்சரிக்கையின் பின்னர் நீதிமன்றினால் விடுதலை

தென்மராட்சி,ஜூலை10

இளம்பெண்ணை பலவந்தமாக கடத்திய மூன்று இளைஞரை சாவகச்சேரி நீதிவான் எச்சரிக்கை செய்து விடுதலை செய்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி நுணாவில் பகுதியில் 22வயது இளம்பெண்ணை பலவந்தமாகக் கடத்திபதாகத் தெரிவித்து சாவகச்சேரி பொலீஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் முறைப்பாட்டுக்காரரான இளம்பெண் தனது முறைப்பாட்டினை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

இதனை அடுத்து சந்தேக நபர்களான செல்வராசா ஞானப்பிரகாசம், சிவகுரு விஜயகுமார், தங்கராசா சுபாகரன் ஆகியோரை நீதிவான் எச்சரித்து விடுதலை செய்தார். (எ-117)

வடமராட்சியில் 8 மணி நேரம் மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை10

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் நண்பகலில் கனரக வாகனமொன்று உயர் அழுத்த மின்கம்பத்துடன் மோதியதில் வடமராட்சிப் பிரதேசம் முழுவதுக்குமான மின்விநியோகம் சுமார் 8மணி நேரம் தடைப்பட்டது.

பருத்தித்துறை மின்சாரசபையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை அடுத்து சுமார் 8மணி நேரத்தின் பின்னர் ஒன்பதாவது தினம் இரவு 9.30மணியளவில் மின்விநியோகம் சீரடைந்தது.

(எ-9-173)

சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும்

அங்கீகாரமற்ற சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு அரசு நடவடிக்கை!

சிறுவர் நன் நடத்தை பராமரிப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களில், ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமாயின் அத்தகைய சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார், சிறுவர் நன்நடத்தை அதிகாரி கி.சிவகரன். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று புதன்கிழமை யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

எந்த ஒரு சிறுவர் இல்லமும் சிறுவர் நன் நடத்தை பராமரிப்பு திணைக்களத்தில் பதிவு செய்து அதன் உரிமத்தைப் பெற்றுக்கொள்ள இது மிகவும் அவசியமாக வேண்டப்படுகிறது.

குடாநாட்டில் இன்று 76சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் உள்ளன. இதில் நான் இல்லங்கள் மட்டுமே சிறுவர் நன் நடத்தைப் பராமரிப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய 72சிறுவர் இல்லங்களும் பதியப்படாமலேயே இயங்கி வருகின்றன.

பதியப்பட்ட இல்லங்களிலுள்ள ஒவ்வொரு சிறுவனுக்கும், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் பராபாலன நன்கொடையாக மாதம் 300 ரூபாவை வழங்கும் அத்துடன், தனிப்பட்ட நன்கொடைகளும் வழங்கப்படும்.

பதியப்படாத சிறுவர் இல்லங்களும் பதியப்பட்டால் இத் திட்டத்தின் மூலம் உதவிகளைப் பெறலாம்- என்றார்.

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் பொலீஸாருக்கு சு.கட்சி எச்சரிக்கை

அரசியல்வாதிகளின் கையாள்களாகி, எதிர்க்கட்சியினருக்கு எதிராகச் சட்டத்தை தவறாகப்பயன்படுத்தும் பொலீஸ் அதிகாரிகள் குறித்து பொ.ஐ.முன்னணியின் மாத்தறை மாவட்ட எம்.பி.மங்கள சமரவீர எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அவ்வாறான பொலீஸ் அதிகாரிகள் குறித்து சுதந்திரக் கட்சி விரைவிலைச் சேகரித்து வருவதாகவும், எதிர்காலத்தில் நிறுவும் அரசின் கீழ் அந்தப் பொலீஸ் அதிகாரிகளின், தவறுகளுக்குப் பொலீஸ் திணைக்கள சட்ட திட்டங்களின்படி தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துக் கிறார்.

சுதந்திரக் கட்சியின் பிரசாரப் பிரிவின் சார்பில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கும் ஒருகடிதத்திலேயே மங்கள சமரவீர இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசியலில் மிகத் தீக்கமான இவ்வேளையில், சட்டத்தை நேர்மையாகக் கடைப்பிடித்து அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாகாதிருக்குமாறும் சட்டத்துக்கு முரணாக நடைபெறும் விடயங்கள், ஊழல்கள் குறித்து கட்சியின் பிரசாரப் பிரிவுக்கு தகவல்களைத் தருமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருக்கிறது

(எ)

எம்பிலிப்பிட்டியவில் தனியார் நிதி நிறுவனம் வாடிக்கையாளரிடம் ரூபா 50 லட்சம் மோசடி!

முறைப்பாடுகளையடுத்து பொலீஸ் விசாரணை

எம்பிலிப்பிட்டிய நகரில் இயங்கி வந்த சட்டவிரோத தனியார் நிறுவனம் ஒன்று வாடிக்கையாளரின் 50 லட்சம் ரூபாவை மோசடி செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த நிறுவனம் தற்போதுமூடப்பட்டிருக்கிறது.

கடந்த ஒரு வருடமாக இயங்கி வந்த இந்த நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குக் கூடுதலான வட்டி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது. உழவு இயந்திரங்கள், மோட்டர் சைக்கிள்கள், ஓட்டோக்கள் என்பன தவணைக் கட்டணங்களின் அடிப்படையில் வழங்கப்படும் என்று கூறியும் பணம் பெற்று வந்திருக்கிறது.

ஆயினும், திடீரென்று அந்த நிறுவனம் மூடப்பட்டுவிட்டதாக வாடிக்கையாளர்கள் எம்பிலிப்பிட்டிய பொலீஸில் முறையிட்டுள்ளனர்.

முறைப்பாடுகளின் அடிப்படையில் 50 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டிருப்பதைத் தெரிகிறது என்று எம்பிலிப்பிட்டிய பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பொலீஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

தலை ஒட்டிப்பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளை பிரிக்க மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை தோல்வியில் முடிவடைந்து சகோதரிகள் இருவரும் இறந்ததையடுத்து ஈரானில் அவர்களுக்கு சிறுமிகள் அஞ்சலி செலுத்துகின்றனர்.

ஈராக் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அமெரிக்க அரசுக்கு சீ.ஐ.ஏ. எச்சரிக்கை!

நெருக்கடியை எதிர்கொள்கிறார் அதிபர் புஷ்

லண்டன்,ஜூலை10

ஈராக் மீது போரை ஆரம்பிப்பதற்காக, அமெரிக்க அதிபர் புஷ் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பில் ஈராக் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று அமெரிக்க அரசை அமெரிக்க புலனாய்வுத்துறை (சி.ஐ.ஏ.) எச்சரித்துள்ளது. இத்தகவலை பி.பி.ஸி. வெளியிட்டுள்ளது.

அணு ஆயுதத் தாயாரிப்புக்கான யுரேனியத்தை ஆபிரிக்க நாடான நைஜரிடமிருந்து வாங்க ஈராக் முயற்சித்ததாக கடந்த ஜனவரி மாதம் அமெரிக்கக் காங்கிரஸில் உரையாற்றியபோது அமெரிக்க அதிபர் புஷ் குறிப்பிட்டிருந்தார். இதேபோன்று வேறு பல குற்றச்சாட்டுக்களையும் அப்போது அவர் ஈராக் மீது சுமத்தியிருந்தார். ஈராக் மீது போரை ஆரம்பிக்கும் தனது எண்ணத்துக்கு பலம் சேர்க்கவே அப்போது இக்குற்றச்சாட்டுகளை அதிபர் புஷ் முன்வைத்திருந்தார். அதன் பின்னர் ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி சதாமின் ஆட்சி அகற்றப்பட்டது. இந்தநிலையில், நைஜர் நாட்டிலிருந்து யுரேனியம் வாங்க ஈராக் முயற்சித்ததாகக் கூறப்படுவது தவறென்று நேற்றுமுன்தினம் அமெரிக்க அதிபர் மாளிகை முதற்றடவையாக உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது. அத்துடன், இத்தகைய தவறான தகவல் அதிபரின் உரையில் இடம்பெற்றிருக்கக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, ஈராக் யுரேனியம் வாங்க முயற்சித்ததாகக் கூறப்படுவது முற்றிலும் தவறான ஒரு தகவல் என்று அதிபர் மாளிகை உட்பட அமெரிக்க பாதுகாப்புத்துறை அலுவலகங்கள் அனைத்துக்கும் இராஜதந்திரத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் -

ஆயினும், இந்தவிடயம் அதிபரின் உரையில் பின்னர் சேர்க்கப்பட்டதாகவும் -

சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யுரேனியம் வாங்க முயற்சித்த விவகாரம் பிரிட்டிஷ் புலனாய்வுத்துறை வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்குற்றச்சாட்டை அமெரிக்க அதிபர் மட்டுமன்றி பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரும் கூட முன்னர் கூறியிருந்தார். ஆயினும், ஈராக் மீது போரை ஆரம்பிப்பதற்காக பொய்க்குற்றச்சாட்டுக்களைக் கூறி அதற்காக போலிச் சான்றுகளையும் உருவாக்கியதாக பிரிட்டிஷ் பிரதமரை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாகச் சாடினர். இந்நிலையில், அமெரிக்க அதிபர் புஷ்ஷும் அத்தகைய ஓர் இக்கட்டை எதிர்கொள்ள நேரிட்டதாகக் கருதப்படுகிறது. (ஒ)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கச் சிப்பாய்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக 2லட்சம் அரசு ஊழியர் பணிநீக்கம்!

தமிழக அரசு அதிரடி நடவடிக்கை

சென்னை,ஜூலை10

15 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கடந்த 2ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். வேலைக்கு வராதவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவர்கள் என்று தமிழக அரசு எச்சரிக்கை விடுத்தது.

அத்துடன், அரசு அலுவலகங்கள் முன்பு போராட்டம் நடத்திய அரசு ஊழியர்களும் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 2ஆயிரத்து 500பேர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வேலைநிறுத்தம் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து தமிழக அரசு சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது. இதன்படி, வேலைக்கு வராத அனைவரும் உடனடியாக பணிநீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து வேலைக்கு வராதவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அப்பட்டியல்களின்படி ஆசிரியர்கள் உட்பட சுமார் 2லட்சம் அரசு ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

அரசின் இந்த அதிரடி நடவடிக்கையைத் தொடர்ந்து சில அரசு ஊழியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பினார்கள். பணியில் சேர்த்து கொள்ளும்படி அவர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தனர். அதில் ஒவ்வொருவரும் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

உடல் நலக்குறைவு, சொந்த வேலை, அரசு ஊழியர் சங்கங்களின் மிரட்டல் என்று அவர்கள் காரணங்களைக் குறிப்பிட்டு இருந்தனர். ஆனால், அவர்களது மன்னிப்பு கடிதங்கள் ஏற்கப்படவில்லை. பணிநீக்கம் செய்யப்பட்ட பிறகு பணியில் சேர்த்துக்கொள்ள முடியாது என்று அதிகாரிகள் அவர்களிடம் தெரிவித்தனர். இதனால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

இதைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அனைத்து மாவட்டங்களிலும் புதிய ஊழியர்கள் தேர்வு செய்யும் பணி தொடங்கியது. சென்னையில் திங்கட்கிழமையில் இருந்து புதிய ஊழியர்கள் தேர்வுசெய்யப்பட்டனர். நியமன உத்தரவு பெற்ற புதிய ஊழியர்கள் உடனடியாக பணியில் சேர்ந்தனர். அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (ஒ)

19 வருடங்களின் பின்னர் கோமாவிலிருந்து மீண்டநபர்

டெர்ரி வால்ஸ்

விபத்து ஒன்றில் சிக்கி சுமார் 19 வருடங்களாக கோமா நிலையில் இருந்த அமெரிக்கர் ஒருவர் கோமாவி லிருந்து மீண்ட அதிசயம் நடந்துள்ளது.

டெர்ரி வால்ஸ் என்ற அந்த 39 வயது நபர் கார் விபத்தில் காயமுற்று கோமா நிலைக்குத் தள்ளப்பட்டார். இவர் 1984 ஜூலை மாதம் முதல் இதே நிலையிலேயே இருந்து வந்தார்.

திடீரென சுயநினைவுக்கு வந்த அவர் கூறிய முதல் வார்த்தை 'அம்மா' என்ற வார்த்தைதான்.

இதுபற்றி அவரது தாய் கூறுகையில், "முதலில் எனது மகன் சுயநினைவுக்கு வந்தபோது நான் எப்படி உணர்ந்தேன் என்று கூற வார்த்தைகள் இல்லை" - என்றார். (ஒ)

சீனாவில் டைனோசர் புதைகுழி!

பெய்ஜிங்,ஜூலை10

சீனாவின் சுசுவான் என்ற மாகாணத்தில், உலகத்திலேயே எங்கும் இல்லாத வகையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட டைனோசர்களின் எலும்புப் புதைப்படிமங்கள் கிடைத்துள்ளன.

டைனோசர்கள் மட்டுமல்ல, முதுகெலும்புள்ள வேறு வகை விலங்குகளின் எலும்புப் படிவங்களும் இங்கே காணப்படுகின்றன. ஆமைகள், முதலைகள், ராட்சத மீன்கள், ஊர்வன இனத்தைச் சேர்ந்த இன்னும் பல உயிரினங்கள், பாலூட்டிகள் ஆகியவற்றின் எழும்புகளும் இங்கே மண்ணில் புதைந்து கிடக்கின்றன.

மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டபோது இந்த உயிரினங்கள் எல்லாம் ஒன்றாக அடித்து வரப்பட்டு இங்கே புதைபுண்டு இறந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

எனவே, இந்த இடத்தை மேலும் தீவிரமாக அகழ்ந்து பார்க்க நிபுணர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். (ஒ)

ஆப்கானியச் சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன

ஐ.நா.அமைப்பு குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தானியச் சிறைகளில் உள்ள கைதிகள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், பெண் கைதிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதாகவும், சர்வதேச மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

ஏராளமான கைதிகள் மரத்தக்கணக்கில் விசாரணை இல்லாமலேயே சிறையில் இருக்கிறார்கள் போதிய இடவசதி இல்லாத நிலையிலும் அதிக கைதிகள் அடைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் போதிய உணவு படுக்க இடவசதி, கழிவறை வசதி எதுவுமே இல்லை என்றும் கூறப்படுகிறது.

ஆனால், ஆப்கானிஸ்தானில் இது போன்ற குற்றங்கள் இப்போது மட்டும் நடக்கவில்லை. கடந்த 20ஆண்டுகளாக இதேநிலை தான் நீடிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

பங்களாதேஷில் படகு விபத்து: 450 பேர் பலியென அச்சம்!

டாக்கா,ஜூலை10

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் இருந்து போலா மாவட்டத்துக்கு பெரிய படகு ஒன்று நேற்று முன்தினம் இரவு புறப்பட்டது. 2 அடுக்குகள் கொண்ட அந்த படகின் மேல் தளத்தில் சுமார் 250 பயணிகளும், கீழ்தளத்தில் 450 பயணிகளும் ஆக மொத்தம் சுமார் 700 பயணிகள் இருந்தனர்.

அந்தப் படகு சந்தர்பூர் எனும் நகரை நெருங்கிக் கொண்டிருந்த போது பலத்த மழை பெய்தது. அதோடு பலத்த சூறாவளிக் காற்றும் வீசியது. இதில் அந்த படகு தத்தளித்தது.

படகில் அளவுக்கு அதிகமான பயணிகள் இருந்ததால் காற்றில் படகு அங்கும் இங்குமாகச் சாய்ந்தது. ஏற்கவே படகுக்குள் வெங்காயம், அரிசி, இரும்பு தகடு மூடைகளும் ஏராளமாக இருந்தன.

திடீரென வீசிய சுழல் காற்று காரணமாக படகு ஒரு பக்கமாக சாய்ந்தது. அதிக எடையால் படகு தலைகுப்புற கவிழ்ந்தது. பயணிகள் அனைவரும் ஆற்றுத் தண்ணீருக்குள் மூழ்கினார்கள்.

படகு சாய்ந்ததும் மேல் தளத்தில் இருந்தவர்கள் தண்ணீருக்குள் குதித்து தப்பினார்கள். பலர் மீட்கப்பட்டனர். அந்த வகையில் 250 பேர் உயிர் தப்பியதாகத் தெரிய வந்துள்ளது.

மீதம் உள்ள 450 பேர் கதி என்ன என்பது இதுவரை தெரியவில்லை. அவர்கள் தண்ணீருக்குள் மூழ்கி பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மீட்பு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு இந்தக்கோர விபத்து நடந்ததால் பலரைக் காப்பாற்ற இயலாமல் போய் விட்டது. (ஒ)

உலக அரங்கில்

இரத்ததானம் செய்வதில் ஆஸ்திரேலியர் சாதனை!

சிட்னி,ஜூலை10

ஜேம்ஸ் ஹரிசன்

இரத்ததானம் செய்வதில் கின்னஸ் உலக சாதனை புரிந்துள்ளார் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹரிசன். இரத்த வங்கிக்கு 804 தடவைகள் சென்று 480 லீற்றர்கள் அளவுக்கு இவர் இரத்தம் வழங்கியுள்ளார். நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் இவர். 51ஆண்டுக்கு முன்பு இவரது வயது 15. அப்போது இவருக்கு இரத்தம் தேவைப்பட்டது. யாரோ ஒருவர் இவருக்கு இரத்தம் கொடுத்து இவரது உயிரைக் காப்பாற்றினர்.

இதையடுத்து, இரத்ததானம் செய்வதின் முக்கியத்துவத்தை இவர் புரிந்துகொண்டார். 1955இல் தனக்கு 18வயதை எட்டியபோது முதல்முறையாக இரத்ததானம் செய்தார். அதிலிருந்து இதைத் தொடர்ந்து மேற்கொள்ள ஆரம்பித்தார். இவரது தாராளத் தன்மையால் 'ஆஸ்திரேலியாவின் கதாநாயகன்' என்றே இவரை அழைக்கின்றனர். (ஒ)

HATTON NATIONAL BANK
HNB
LIMITED
ஹற்றன் நஷனல் வங்கியின்
வாடிக்கையாளர் நிலையமொன்று
ஜூலை மாதம் 11ஆம் திகதி காலை 10.30 மணியில்
வரும் சுபவேளையில் இல. 110. கே.கே.எஸ். வீதி,
சுன்னாகத்தில் திறந்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
C/28847
UTHAYAN Graphics

முதலாம் ஆண்டு நினைவுதினப் பிரார்த்தனை



அமரர்

மாணிக்கவாசகர் விஜயவர்மன்

ஸ்தாபகர்: எக்ஸ்போ வீடியோ கொம்பிளெக்ஸ், கோண்டாவில்

தாயின் மடியில் 07-03-1954

இறைவன் திருவடியில் 21-06-2002.

நீ சென்ற இடம் சொல்லாய்?
விவேகியாய் வித்தைகள் பல செய்த
விஜி! நீ வீழ்ந்து ஆண்டு ஒன்று....
கலையுலகும் கட்டியமனை மகளும்
உன் கண்ணின் மணியான மைந்தனும்
உடன் பிறந்தவரும் உற்றவரும்
உனைக் கண்டு ஆண்டு ஒன்று....
நிலையற்றுத் தவிக்கின்றோம்
நீ சென்ற இடம் சொல்லாய்?

திருமதி ரேணுகா விஜயவர்மன் (மனைவி),
வி.லரூசன் (மகன்) மற்றும் சகோதரர்கள்.

EXPO
VIDEO COMPLEX
PROFESSIONAL
Video Film Makers.

No. 7, K.K.S. Road,
Kondavil.
T.P. No.: 021 - 3100

(சி-28828) (24-19-15)

பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத்
தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.
தகைமையுடையவர்கள் தங்களது சுயவிவரமடங்கிய வேண்டுகைகளை
2003.07.20ஆம் நாளிற்கு முன்னதாக
எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

பணிநிலை :- 01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

கல்வித் தகைமை :

பணிநிலை (01) :- க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

பணிநிலை (02) :- க.பொ.த.(உ/த)பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(C/28827) (27-22-24-14-12-19)

உதயன்

அரசு தடம் புரளுமா?

விடுதலைப் புலிகள் கோரியபடியும் அரசு வாக்குறுதி அளித்தபடியும் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான முழு விவரங்களும் விளக்கங்களும் அடங்கிய பூரணமான வரைவு ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வார இறுதியில் அல்லது அடுத்த வார முற்பகுதியில் புலிகளுக்கு அனுப்பிவைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக நாட்டுமக்களின் கருத்து எப்படி இருக்கிறது என்பதை தென்னிலங்கையின் பழம்பெரும் அரசியல்வாதிகளில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார எடுத்துக்கூறியிருக்கிறார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா, யாழ்நகரில் சமீபத்தில் நடைபெற்ற போது, கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் வாசுதேவ நாணயக்கார உரை நிகழ்த்தினார்.

தனது உரையில் அவர் பின்வருமாறு கூறினார்.

"வடக்கு - கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களின் உரிமைகளும் விடுதலையும் நிலைநாட்டப்படவேண்டுமானால் விடுதலைப் புலிகள் கேட்கின்ற இடைக்கால நிர்வாகத்தை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

"இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி, தமிழ் மக்களின அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இடைக்கால நிர்வாகம் அவசியமானதாகும்.

"சிங்கள மக்களின் மனநிலையில் இப்போது மாற்றமேற்பட்டுள்ளது. அவர்கள் முன்புபோல் இன்று இல்லை. தமிழ்மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

"இடைக்கால நிர்வாகத்தில் வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களினது நலன்களும் பேணப்பட வேண்டியது அவசியமாகும்."

மேற்கண்டவாறு வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளதுபோலவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் வீடமைப்புப் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஆலோசகருமான எம்.எஸ். செல்லச்சாமியும் வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை அவசியம் தேவை என்று வலியுறுத்தியிருக்கிறார்.

'வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை. ஐந்து ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் கொடுத்துப் பாருங்கள்' என்று இ.தொ.காவின் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராக இருந்த போது அமைச்சரவையிலேயே எடுத்துக்கூறியதையும் செல்லச்சாமி நினைவுபடுத்தியிருக்கிறார்.

எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற ஐ.தே.க. பேராளர்கள் மாநாட்டில் இடைக்கால நிர்வாகம் வழங்குவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை வரவேற்றுப் பாராட்டும் தெரிவித்திருக்கிறார் செல்லச்சாமி.

பேராளர்கள் மாநாட்டுக்கு தலைமை வகித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உரையில் பின்வருமாறு உறுதிபடக்கூறியிருக்கிறார்.

"வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபையை எப்படியும் ஏற்படுத்துவோம். அதனையடுத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்போம். அதில் அரசு உறுதியாக உள்ளது.

"இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதை யாரும் மறுக்கமுடியாது. இது விடயத்தில் மனச்சாட்சியை முடி செயற்பட நான் தயாராக இல்லை."

அன்று இப்படி இறுக்கமாகவும் திடமாகவும் உறுதியாகவும் கூறிய பிரதமருக்கு இன்று என்ன நடந்துவிட்டது என்று கேட்கத் தோன்றுகிறது.

அவரோடு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் அப்படிக் கேட்க வைக்கின்றன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய முழு விவரங்கள் அடங்கிய வரைவு அல்ல, பொதுவான விளக்கங்களும் குறிப்புகளுமே அனுப்பப்படவுள்ளன.

இடைக்கால நிர்வாக சபை என்ற பெயரைத் தவிர்த்து, மாகாண நிர்வாகம் குறித்த கட்டமைப்பு ஒன்றையே அரசு தனது ஆலோசனையாக முன்வைக்க இருக்கிறது. அது பற்றி பேசி முடிவெடுப்பதற்குப் புலிகளுக்கு அழைப்புவிடும் தோரணையிலான ஆவணமொன்றையே அரசு புலிகளுக்கு இந்த வார இறுதியில் அல்லது அடுத்தவார ஆரம்பத்தில் அனுப்ப இருக்கிறது என்று செய்திகள் கசிந்துள்ளன.

அரசு உண்மையில் இதைத்தான் செய்யப்போகிறது என்றால் இந்த முயற்சி பலன்தருமா?

புலிகள் கேட்டதெல்லாம் வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை மீளக்கொணர்ந்து மக்களின் தேவைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை நிறைவேற்றி அழிந்த பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்பிச் சிறப்பான நிர்வாகத்தை நடத்துவதற்கு வேண்டிய வலுவான அரசியல் நிர்வாக அதிகாரங்களுடன் கூடியதும், புலிகளின் அதீக பங்களிப்பைக் கொண்டதுமான ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத்தான் அதற்கான வரைவையே எதிர்பார்த்திருக்கிறார்கள். வேறு எதுவும் அவர்களைத் திருப்திப்படுத்தாது; பேச்சுக்குத் திரும்ப வைக்காது என்பதை அவர்கள் முன்னர் இரண்டு மூன்று தடவைகள் நிதர்சனம் காட்டிவிட்டார்கள்.

அரசு பழைய வழியிலேயே மீண்டும் செல்லுமானால் சமாதானப் பாதையில் இருந்து அது தடம் புரள்கிறது என்றே கருதப்படும்.

விலாசம் விசாரிப்பதாக நடித்து வயோதிபர் சங்கிலி அபகரிப்பு

மோ.சைக்கிள் திருடர்கள் கைவரிசை

வலி.தெற்கு,ஜூலை10

வீட்டு விலாசம் விசாரிப்பதாக நடித்து வயோதிபர் ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் அறுத்துக்கொண்டு ஓடிமறைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சங்குவேலிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வீதியால் பகல் நேரம் நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபரை, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு வாலிபர்கள் மறித்து ஒருவருடைய பெயரைக் கூறி வீடு கேட்டதாகவும் முதியவர் யோசித்து பதில் கூறமுன் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு அவர்கள் ஓடிமறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சக்கிள் திருடர்கள் கறுப்புக் கண்ணாடி, தலைக்கவசம் (ஹெல்மெற்) அணிந்திருந்ததால் அவர்களை அடையாளம் தெரியவில்லை என்று முதியவர் தெரிவித்தார்.

அதேதினம், கோவிலுக்கு சென்றுவிட்டு அவ்வீதியால் வந்து கொண்டிருந்த சிறுமி ஒருவரிடமிருந்தும் சங்கிலி அறுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(ம-152)

நாட்டு நடப்பு

கொடுக்கவிழ அவனும் ஓட....

தோளதைத் தட்டி வீரன்
தொடுத்த போர் வெற்றிகாண
வேழத்தை வீழ்த்தி வென்று
வெற்றி மேல் வெற்றியீட்ட
மாளத்தன் பகைவர் எல்லாம்
மனத்திடை மகிழ்ச்சி பொங்க
காளையை மடக்கி வென்று
கன்னிகை பிடித்தான் வீரன்
வாளதை வீசி வென்று
வனிதை கை பிடித்தான் அன்று
ஏழையாய் அவள் பின்னோடி
எடுத்து ஒரு கடிதம் நீட்ட
கோழைக்கு அவள் "செருப்பைக்" காட்ட
கொடுக்கவிழ அவனும் ஓட
பாழாச்சடா! எமது வீரம்
பரிகசிக்க நீ வைத்திட்டாயே!.

- விகடகவி.

அக்கராயனில் இயங்கி வந்த

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நேற்று முதல் அதன் சொந்த இடத்தில்!

கிளிநொச்சி,ஜூலை10

கடந்த 7 வருடங்களாக அக்கராயனில் இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நேற்றுமுதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளின் போது மக்களுடன் சேர்ந்து வைத்தியசாலையும் இடம்பெயர்ந்து அக்கராயனில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

குண்டு வீச்சுக்களால் சேதமடைந்திருந்த இவ்வைத்தியசாலைக் கட்டடம் தற்போது ஓரளவு நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டதை அடுத்து நேற்றுமுதல் மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப வைபவத்தில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகம் வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதியினை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

அரசாங்கம், தமிழீழ சுகாதார சேவைப்பிரிவு மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட உதவிகளைக் கொண்டு இவ்வைத்தியசாலை புனரமைக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்றே பிரிவு, இரத்தவங்கி மற்றும் ஆண்கள் பெண்களுக்கான தற்காலிகமான தனித்தனியான விடுதி வசதிகள் போன்ற தனித் தனிப்பிரிவுகள் தற்போது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வைத்தியசாலையை அது அமைந்துள்ள இடத்துக்கு சற்றுத்தொலைவில் நவீன வசதிகளுடன் கூடியதாக அமைப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதற்கான அடிக்கல்லும் நடப்பட்டது.

எனினும் அதன் பின்னர் உருப்படியான வேலைத்திட்டம் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனாலேயே வைத்தியசாலை மீண்டும் பழைய இடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ம-4-78)

'வடகடல்' நிறுவனம் இனிமேல் இந்து விவகார அமைச்சின் கீழா?

மன்னார் மீனவர் சமாசம் எதிர்ப்பு; பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடகடல் நிறுவனம் இந்து சமய விவகார அமைச்சிடம் கையளிக்கப்படுவதற்கு மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

வடகடல் நிறுவனமானது 1961ஆம் ஆண்டில் சீநோர் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. வடபகுதி மீனவர்களுக்கு இழைநார் பிளாஸ்ரிக் படகுகளை வழங்குவதனையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு சீநோர் நிறுவனம் செயற்பட்டுவந்தது.

நல்லமுறையில் இயங்கி வந்த இந்நிறுவனம், பெரும்பாலான வடபகுதி மீனவர்களிடம் இழைநார்ப் படகுப் பாவனையை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், இனக்கலவரத்தின் போது இந்நிறுவனம் முற்றாகச் சேதமடைந்தது. மீனவர்களின் நன்மை கருதி அது மீளவும் திருத்தியமைக்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தை மேலும் புனரமைத்து நல்லமுறையில் செயற்படுத்துவதற்காக அது மீண்டும் புனர்நிர்மாண அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

வடகடல் நிறுவனத்துடன் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ எந்தவிதத் தொடர்புகளுமற்ற இந்து சமய விவகார அமைச்சு, அந்நிறுவனத்தைப் பொறுப்பெடுக்க இருப்பதாக அறிந்து பேரதிர்ச்சி அடைந்தோம். இந்த மாற்றத்தினை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற எமது சமாசக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

எனவே, வடகடல் நிறுவன விவகாரத்தை புனர்வாழ்வு அமைச்சின் கீழேயே பேணுவதற்கு ஆவனசெய்யவும் -

- இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-9)

அனுமதியின்றி பனைமரம் ஏற்றிவந்த 'ஹண்டர்' சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஜூலை10

சட்டவிரோதமாக பனைமரங்களை ஏற்றி வந்த 'ஹண்டர்' வாகனத்தின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி மரங்களை ஏற்றி வந்த மேற்படி வாகனம் கடந்த 4ஆம் திகதி கெற்பலிச்சந்தியில் வைத்துப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது. சாரதியும் கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து அந்த வாகனத்தின் சாரதியான துன்னாலை தெற்கைச் சேர்ந்த தங்கராசா கசிராதகன் என்பவரை சாவகச்சேரி நீதிமன்றில் திங்களன்று பொலீஸார் ஆஜர் செய்தனர். குறிப்பிட்ட நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ம-10-117)

நாளை

ஆனி 26
வெள்ளிக்கிழமை
(11.07.2003)
திதி : திரயோதசி
பின்னிரவு 3.22
நட்சத்திரம்: கேட்டை
பின்னிரவு 3.18
சுபநேரம் : 5.59-7.29
ராகுகாலம் : 10.29-11.59
(பழைய நேரப்படி)

உதய வாக்கு

முழுமையாகப் புரிந்து கொள்ளாத எதனையும் நிரந்தர சொந்தமாக்கிக் கொள்ள முடியாது!

குப்பிளானில் உரக்களஞ்சியம் நிறுவுவதற்கு நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஜூலை10

உடுவில் கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட குப்பிளான் பிரதேசத்தில் உரக்களஞ்சியம் ஒன்று நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உரக்களஞ்சியம் இன்மையால் உரத்தைப் பாதுகாப்பாகப் பேணவும் விவசாயிகளுக்குத் தேவையான போது உரத்தை வழங்கவும் முடியாத நிலை இருந்து வருகிறது.

குப்பிளான் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள உரக்களஞ்சியத்துடன் விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டு அதனூடாக விவசாயிகளுக்கு தேவையான உரம் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தியாப் திட்டத்தின் கீழான கடந்த வருட வேலைத்திட்டங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், புதிய வேலைத்திட்டங்களுக்கான அனுமதியோ, நிதியோ இதுவரை கிடைக்கவில்லை எனவும் உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் த.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய உள்ளீடுகள் கமநல கேந்திர நிலையத்தில் போதியளவு இருப்பதாகவும், அவற்றைத் தேவைப்படும் விவசாயிகள் பெற்றுப் பயனடையலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கமநல கேந்திர நிலையத்துக்குப் பக்கத்தில் உள்ள அரசாங்கக் காணியை கமநல கேந்திர நிலையத்துடன் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொ.குகநாதன் மேலும் கூறினார். (ம-152)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 ~ 07 ~ 1961

மறைவு 10 ~ 07 ~ 2000

அமரர் சாமுவேலு தனபாலு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவரே
வானுறையும் தெய்வமாக நெஞ்சத்துள்
-நிறைந்தவரே
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள்
-நினைவுகள்
நீங்காது என்றென்றும் நெஞ்சத்தில்
-நிலைத்திருக்கும்!

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (20045)(27-13-14) சாமுவேலு குடும்பத்தினர்

திறப்புவிழா

தொண்டமனாறு வெளிக்கள நிலைய அலுவலகத் திறப்புவிழா இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு நிலையத்தலைவர் கே.எஸ். குகதாசன் தலைமையில் யாழ்வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும் நிலையக் காப்பாளருமான ப.விக்னேஸ்வரன் இந்த அலுவலகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (ம-10)

காணி தேவை

இளம் குடும்பமொன்று யாழ். பிரதேசத்தில் மீளக்குடியேறுவதற்கு 4 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. காணி யாழ். - பலாலி வீதிக்கு அருகில், திருநெல்வேலிச் சந்திக்கு அப்பால் விரும்பத்தக்கது. விற்க விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும். இடைத்தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். தொடர்புகளுக்கு: T.P.No. 0041318692443
(21-19-14-18-12-24-13-27) (19874)

சாவகச்சேரியில் ஆய்வுகூட வசதி

தென்மராட்சி,ஜூலை10

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரிக் கிளை அலுவலகத்தில் பொதுமக்களின் நன்மை கருதி ஆய்வுகூட வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள இந்தச் சேவையைப் பெற்றுகொள்ள விரும்புவோர் மீசாலையில் உள்ள மேற்படி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் கேட்டுள்ளார். (ம-10-117)

4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

கப்டன் முத்துக்குமார் ஸ்ரீபன்
சண்முகம் ஞானச்சந்திரன்
யாழ். - கரவெட்டி கிழக்கு. கரவெட்டி

தாயின் மண்ணில் மழலையாய் 11.10.1972

தாய்மண் மடியில் மாவீரனாய் 10.07.1999

இன்று (10.07.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அஞ்சலி நிகழ்விலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

காட்டுப்புலம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

உமது பிரிவால் துயருற்று இங்கு வாழும்:
குடும்பத்தினர்.
(20016) (26-13-14-27)

முதல் முறையாக அறிமுகமாகிறது

ClimaX கிளைமெக்ஸ்

- ClimaX இல் இயற்கையான அனைத்து விட்டமின்களும் அடங்கியுள்ளன.
- ClimaX உடலுக்கு அதிசக்தியை தரக்கூடியது.
- ClimaX இல் உடலுக்கு உற்சாகம் சுறுசுறுப்பு ஞாபகசக்தி போன்றவற்றை தரக்கூடிய அற்புதமான பதார்த்தம் அடங்கியுள்ளது.

பாவனைமுறை:- தினந்தோறும் இரவில் ஒரு கெப்சியூல் வீதம் தொடர்ந்து பாவித்து சிறந்த பயனைப் பெறலாம்.

யாழ்.முகவர்:-
ஜெகன் பார்மஸி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வன்னி முகவர்:-
அகிலன்ஸ் பார்மஸி
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

(C/28742) (28-16-1719-14-24-13-27)

விஜியண்ணாவின் ஆத்மா பெறுக சாந்தி

தோற்றம் 07 ~ 03 ~ 1954

மறைவு 21 ~ 06 ~ 2002

அமரர் மாணிக்கவாசகர் விஜயவர்மன்

வாழ வழி காட்டி வைத்து வளம் நிறைந்த
வீடியோக் கலை பயிற்றி விடிவு காட்டி
ஆழ மனத்தில் உறைந்து எமைப்பிரிந்த
அண்ணாவே விஜியண்ணா, மறப்போமா நாம்?
சூழிதயம் நிறைந்தாலே விஜயவர்மா
சுந்தரப் புன்னகையும் தோற்றுதண்ணா!
ஆழியாம் அருள் நிறைந்த சிவபதத்தில்
ஆத்மாவும் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(20018) (13-14-27)

ஸ்கை போட்டோ (உரும்பிராய்), K.பரமேஸ்வரன் (இணுவில்). யுனிக் வீடியோ (இணுவில்), மஜிக் வீடியோ (கல்வியங்காடு).

STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

Admissions are open from,

Garden City College affiliated to **Bangalore University**

Garden City College	COURSES	DURATION	G.C.E. (A/L) PASSES NEEDED
	B.Sc. (Computer Science)	3 Year	Maths, Physics & Statistics
	B.Sc. (Fashion & Apparel Design)	3 Year	Pass in All Subjects in any discipline
	B.Sc. (Microbiology)	3 Year	Chemistry and Biology
	B.Sc. (Genetics)	3 Year	Chemistry, Physics, Biology, Zoology, Botany
	B.Sc. (Biotechnology)	3 Year	Chemistry, Physics, Biology
	BCA. (Bachelor of Computer Applicants)	3 Year	Pass in All Subjects in any discipline
	BBM. (Bachelor of Business Management)	3 Year	Pass in All Subjects in any discipline
	BHM. (Bachelor of Hotel Management)	4 Year	Pass in All Subjects in any discipline
	B.A. (Journalism)	3 Year	Pass in All Subjects in any discipline
	B.Com (Computers)	3 Year	Pass in All Subjects in any discipline

SSM College of Engineering affiliated to **ANNA University**

SSM College			
	B.E. Information Technology	4 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.E. Computer Science and Engineering	4 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.E. Electronics and Communication Engineering	4 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.E. Mechanical Engineering	4 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.Sc. Information Technology	3 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.Sc. Computer Technology	3 Year	Pass in All Subjects with Maths & Physics
	B.Sc. Apparel and Fashion Technology	3 Year	Pass in All Subjects with Maths & Physics
	M.S.C. Information Technology	5 Year	Pass in All Subjects in any discipline

Muthayammal Arts & Science College affiliated to **Periyar University**

Mmuthayammal College	COURSES	DURATION	G.C.E. (A/L) PASSES NEEDED
	B.Sc. Biochemistry or Microbiology	3 Year	Biology, Physics & Chemistry
	B.Sc. Biotechnology or Bio Informatics	3 Year	Biology, Physics & Chemistry
	B.Sc. Maths / Physics / Electronics / Chemistry	3 Year	Maths, Physics & Chemistry
	B.Sc. Computer Science	3 Year	Maths, Physics & Chemistry
	Bachelor of Computer Applications	3 Year	Pass in All Subjects in any discipline
	B.Com	3 Year	Pass in All Subjects in any discipline
	BBA. Bachelor of Business Administration	3 Year	Pass in All Subjects in any discipline
	Govt. Diploma in Civil, Mechanical, Electrical, Electronics, Computer Tech, IT, Automobile, Communication	3 Year	Pass in All Subjects in G.C.E. O/L

Become a World Recognized GRADUATE

Admission, Visa and Hostel arrangements செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலதிக விபரங்களுக்கு Call: 0777-767818

SCHOLARS INFORMATION CENTER

2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06. Tel: 074- 512 591

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1912 ~ 08 ~ 30

உதிர்வு 2002 ~ 07 ~ 10

அமரர் V.M.யோசப்

எங்குமே நிறைந்த தான
இறைவனைப் போற்றும்
நெஞ்சம் உமக்கு ஐயா!
எங்களை உய்வதற்கு
என்றுமே நீர் உழைத்தீர் ஐயா!
இங்கிவை கொண்ட மேலோனே!
எவ்விதம் மறப்போம் உமை ஐயா?

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (10-07-2003) வியாழக்கிழமை காலை 6.30மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி இவரின் ஆத்மசாந்திக்காக வேண்டுமாறு தங்களை பணிவுடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல.25,மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.
(20005) (26-13-14-27)

கட்டட திணைக்களப் பணிகளுக்கென தெற்கிலிருந்து சிங்களத் தொழிலாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை10

கட்டடத் திணைக்களத்தின் கீழ் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டட வேலைகளுக்கென தென்னிலங்கையில் இருந்து கட்டடத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மேசன்வேலை, தச்சுவேலை மற்றும் அவற்றுக்கான கூலித்தொழில் என்பனவற்றுக்கே தென்னிலங்கையிலிருந்து சிங்களத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் கட்டடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட வேலைகளில் இத்தொழிலாளர்கள் உடனடியாகவே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் பெருமளவு தொழிலாளர்கள் வேலையற்றிருக்கும்போது அவர்களைப் புறக்கணித்துவிட்டு தென்னிலங்கையிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வேலையில் ஈடுபடுத்துவது குறித்து பல தரப்புகளிலிருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கட்டடத் திணைக்களத்தின் கீழ் வேலை செயது வரும் குடாநாட்டைச் சேர்ந்த மேசன் தொழிலாளிகள் மற்றும் கூலித்தொழிலாளிகளுக்கு வழங்கப்பட்ட சம்பள தொகைகளை விட தென்னிலங்கையில் இருந்து வர வழைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலான சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன் அவர்களுக்கு மேலதிகமாக தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகள், போக்கு வ வசதிகள் என்பவற்றையும் கட்டடத் திணைக்களம் செய்து கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தச் செயற்பாடானது இது வரை காலமும் கட்டடத் திணைக்களத்தின் கீழ் குறைந்தளவு சம்பளத்துடன் வேலை செய்து வரும் குடாநாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

(ம-4)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் சுழிபுரம், சத்தியகாடு சந்தைக் காணியில் சிரமதானத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)

படையினர், பொலீஸார் சோதனை மட்டக்களப்பில் மிகத் தீவிரம்

மட்டக்களப்பு,ஜூலை10

மட்டக்களப்பு நகரின் முக்கிய பகுதிகள், நுழைவாயில்கள் ஆகிய இடங்களில படையினரும் பொலீஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமைமுதல் மட்டக்களப்பில் தீவிர சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

நகரின் நுழைவாயில்களான வவுணதீவு, மண்முனைத்துறை ஆகிய இடங்கள் ஊடாக படகுகளில் வரும் பொதுமக்களும் -

மற்றைய நுழைவாயில்களான பட்டிருப்பு, குருக்கள்மடம் பாலம் ஊடாக வரும் பொதுமக்களும் - தீவிர உடற்சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இந்தச் சோதனைகளில் பொலீஸாருடன் படையினர் மற்றும் அதிரடிப் படையினர் ஈடுபடுவதாகவும் -

இந்தச் சோதனையால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் - கூறப்படுகிறது.

நகரப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளிலும் பொதுமக்கள் கடும்சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

உடற்சோதனை மட்டுமல்லாது உடைமைகளும் கடுமையாக சோதனை செய்யப்படுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் நகரசபை உறுப்பினர் வெற்றிடத்துக்கு பைரூஸ் நியமனம்

விரைவில் நகரபிதாவாகத் தெரிவாகலாம்

புத்தளம்,ஜூலை10

புத்தளம் நகரசபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சுமர்தீன் முஹம்மது பைரூஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஐ.தே.க. செயலாளர் நாயகம் சென ரத் கப்புகொட்டுவ இத்தெரிவை புத்தளம் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

அரசுக்கும் மு.காங்கிரஸுக்கு மிடையே ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எவராவது இராஜினாமா செய்தால் அவ்விடத்திற்கு மு.காவைச் சேர்ந்த ஒருவரே உறுப்பினராக நியமனம் செய்யப்படல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஒன்றரை வருடங்களாக நகரபிதாவாக இருந்த மு.காங்கிரஸைச் சேர்ந்த ஏ.எம்.எச். ஹுசைன் தலைவர் பதவியையும் உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்தார்

இதனையடுத்தே முகம்மது பைரூஸ் புதிய உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரான கே.ஏ.பாயிஸின் சகோதரராவார்.

சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள முகம்மது பைரூஸ் விரைவில் நகரபிதாவாக தெரிவு செய்யப்படுவார் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

டெக் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை10

நள்ளிரவுவேளை வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த 'டெக்' ஒன்றைத் திருடிச்சென்றுள்ளனர். நவாலிப்பகுதியில் இச்சம்பவம் அண்மையில் இடம் பெற்றது.

(ம-10-30)

சாயிபாபாவின் ஆன்மீக வழிகாட்டலுக்கு பிரதமர் ரணில் மனம் திறந்து புகழ்மாலை

உலகில் ஆன்மீக வழிகாட்டுதல்கள் குறைவாகக் காணப்படுகின்றன. அந்தக் குறைபாட்டை நீக்க பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா அருட்பணியாற்றி வருகின்றார். அதனை நாம் ஏற்றுப் போற்றிப் பாராட்ட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஸ்ரீசத்தியசாயி சேவோ அமைப்பின் பிராந்திய செயலகம் ஏற்பாடு செய்த சமயங்களுக்கிடையிலான மாநாட்டிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பல சமயத் தலைவர்களும் பங்கு பற்றிய இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

அமைச்சர்களான கரு ஜயசூரிய, டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார, தி.மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பல நாடுகளிலும் இருந்து வந்த சமயப் பிரதிநிதிகளும் நிகழ்வில் பங்குபற்றினர்.

'நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் அக்கறை மிகு சமுதாயத்தை உருவாக்குவதிலும் சமயங்களின் பங்கு' எனும் தொனிப் பொருளில் இம் மாநாடு நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சத்திய சாயிபாபாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குப் பல தடவைகள் கிடைத்தது.அவரைச் சந்தித்த, ஒவ்வொரு தடவையும் எனக்கு அது புதிய பலமாகவும் வழிகாட்டலாகவும் இருந்தது. நான் அறிந்த வரையில் பாபா உலகில் உள்ள அனைத்து மதங்களின் சாரத்தையும் உள்ளகப்படுத்தி நல்லுபதேசம் செய்து வருகின்றார்.

நன்மை, தீமைகளை அவர் எடுத்துரைக்கின்றார். அவர் ஆற்றி வரும் தொண்டு மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். அதற்காக அவருக்கு நாம் நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கின்றோம்.

ஒரு மதமானது கோயில்கள், பள்ளி வாசல்கள் ,தேவாலயங்கள் போன்ற வணக்கத் தலங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுவிடக்கூடாது. அது வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக இருக்கவேண்டும்.

அன்பும், சகோரத்துவமும் தேசங்களின் எல்லைகளைக் கடந்து சகல மக்களையும் தழுவி நிற்பவை. மக்களின் இயல்புகளுக்கு சிந்தனைகளும் அபிலாஷைகளும் உரமூட்டுபவை.

சட்டங்கள் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்பவோ ஐக்கியத்தை ஏற்படுத்தவோ முடியாது. இதயங்கள் இணைவதன் மூலம் தான் இவை சாத்தியமாகும் - என்றார் பிரதமர்.

(ஒ)

சங்கரிதான் முதுகெலும்புள்ள தமிழன் என்று சிங்கள எம்.பிக்கள் பாராட்டு!

எதிர்க்கட்சியினர் எழுந்து நின்று மேசைகளில் தட்டி வரவேற்பு

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு சபை மண்டபத்தினுள் பிரவேசித்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர் பலரும் எழுந்துநின்று மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

இதனால் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த ஆனந்தசங்கரி எம்.பி., புன்னகை தவழ மெதுவாக நடந்து வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

சபைக்குள் என்ன நடக்கிறது? ஏன் இந்தத் திடீர் வரவேற்பு? என்று சபையினருக்குப் புரியவில்லை. கலரிகளில இருந்தவர்களுக்கும் புரியவில்லை.

ஆனால், தொடர்ச்சியாக இடம் பெற்ற சம்பவங்கள் இந்தத் திடீர் வரவேற்பிற்கான காரணத்தை வெளிப்படுத்தின.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் ஆலோசகர் அமுராபண்டாரநாயக்க, ஜேவிபி உறுப்பினர் விமல்வீரவன்ஸ முதலானோர் ,ஆனந்தசங்கரி எம்.பிக்குப் புகழாரம் சூட்டினர்.

இங்குள்ள எல்லா தமிழ் கட்சிகளும் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் புலிகளுக்கும் ஆதரவாகச் செயற்படும் போது, கூட்டணித் தலைவர் ,ஆனந்தசங்கரி மட்டும் துணிச்சலாகப் புலிகளைக் கண்டித்துக் கொண்டே தனது தலைமைப் பதவியையும் காப்பாற்றிக்கொண்டார். அவர் தான் முதுகெலும்பு உள்ள தமிழன் என்றெல்லாம் ஆனந்தசங்கரியைப் புகழ்ந்து பாராட்டினர்.

இருதரப்புகளுக்கு முன்னர் நடைபெற்ற தமிழ் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ,ஆனந்த சங்கரி தலைமைப் பதவியில் இருந்து தூக்கி வீசப்படலாம் என்று பரவலாகக் கருதப்பட்டது. ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. தனது தலை மைப்பதவியைத் தக்க வைத்துக் கொண்டார் ,ஆனந்தசங்கரி. அதற்காகவே அவருக்கு சிங்கள எம்.பிக்களின் வரவேற்பு, புகழாரம், பாராட்டு என்று தெரியவந்தது.

நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது.

முதற்கட்டமாக கடந்த மாதம் 19 ஆம் திகதி சபைக்குள் எதிர்க்கட்சியினர் பிரேதப் பெட்டியைக் கொண்டு வந்த விடயம் தொடர்பாகச

சிங்கள எம்.பிக்களோடு சேர்ந்து கொண்டு ஒரு தமிழரும் அதாவது ஈபிடிபி உறுப்பினரான நடராஜா மதனராஜாவும் முதன்முறையாக கூட்டணி உறுப்பினர் ஒருவரை - ஆனந்தசங்கரியைப் - பாராட்டினர்.

புலிகள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என்று ஆனந்தசங்கரி கூறிவிட்டார். அதனால், அவர்தான் இந்த முதுகெலும்பு உள்ள ஒரே தமிழன் என்றார் மதனராஜா. அப்படியானால், பேசுபவருக்கு முதுகெலும்பு இல்லையோ என அருகில் இருந்த தமிழ் உறுப்பினர்கள் கிண்டல் அடித்ததும் காதில் விழுந்தது.

சபாநாயகர் தமது தீர்ப்பைக் கூறினார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை மீறும் வகையில் மலர்வளையத்தையும், பிரேதப் பெட்டியையும் கொண்டு வந்த உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அன்று பிரேதப் பெட்டியை சபைகுள் கொண்டுசெல்ல முயற்சித்ததை அறிந்து நேரடியாக அங்கு சென்று அந்த முயற்சியை தடுத்து நிறுத்தும்படி நான் பொலீஸாருக்கு உத்தரவிட்டும் அவர்கள் அவற்றை நிறைவேற்றவில்லை. இதுபற்றி விசாரணை மேற்கொள்ளப்படும் - இப்படிச் சபாநாயகர் கூறினார். (ஒ)

அநேகமான புலனாய்வு உறுப்பினர்களை கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகளே!

பாதுகாப்பு அமைச்சர் பகிரங்கக் குற்றச்சாட்டு

ஆதே முன்னணி ஆட்சிக்காலத்தில் கொலைகள் அதிகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் அச்சத்துடன் வாழ்கிறார்கள் எனத் தெரிவித்து இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் கூற்றிலும் உண்மையில்லை.

பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை விவாதத்திற்கும் பதிலளித்துப் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கொலை செய்யப்படுகின்றன. இறைவரப் புலிகள் செய்கின்றன. ஆனால், எல்லாக் கொலைகளுக்கும் புலிகள் காரணமல்ல. அத்துடன், வடக்கு-கிழக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கொலைகள் இடம்பெற்றால் அதுபற்றி சாட்சியமளிக்க மக்கள் தயங்குகின்றனர் ஏனைய பகுதிகளில இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளோம்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றியவர்களில் பலர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். பழிவாங்கும் நோக்கிலும் இவர்கள் கொல்லப்படுகின்றனர்.

எப்படியிருப்பினும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று கூறினார்.

ஓம் நமோ நாராயணாய!

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய

மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

10-07-2003

ராஜ கோபுரம் பழைய தோற்றம்

உள் முகப்புத் தோற்றம்

புதிய ஆஞ்சநேயர் கோயில்



புதிய ஸ்ரீ ரங்கநாதர் கோபுரம்

புதிய ஸ்ரீ சந்தான கோபாலர் கோயில்

புதிய ஸ்ரீ வேணு கோபாலன் கோயில்

புதிய ஸ்ரீ ராமர் கோயில்

கொனிகா கலர்லாப் அன் சிறி டிஜிற்றல் கலர்லாப்

யாழ்ப்பாணத்தில் முதன் முதல் டிஜிற்றல் முறையிலான புகைப்பட பிரதியாக்கத்தை அறிமுகப்படுத்தி சேவையாற்றி வரும் நாம், புதிய அதிநவீன டிஜிற்றல் தொழில் நுட்பவசதிகளை கொண்ட எமது ஆய்வுகூடத்தில் உலகில் உள்ள அனைத்து டிஜிற்றல் புகைப்பட கருவியின் புகைப்படத்தை பிரதியாக்கம் மிகவும் நேர்த்தியாக செய்து தரப்படும்.

இலவசம்

புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு அனைத்து புகைப்பட சுருள்களுக்கும் விசேட சலுகையாக மூன்று புகைப்பட பிரதிகளை இலவசமாக வழங்குகின்றோம் என்பதை அறியத்தருகின்றோம்.

சிறி அமலா ஜுவலர்ஸ்

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு!
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-222 5800 Mobile: 0777-730567

மீண்டும் ஆயுதத்தைத் தூக்குங்கள்

பிரபாகரனுக்கு மக்கள் உத்தரவு!

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'ஜூனியர் விகடன்' பத்திரிகையில் இலங்கை விவகாரம் மற்றும் 'பொங்கு தமிழ்' என்பன தொடர்பாக வெளியான கட்டுரை இது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்துவந்த சமாதானப் பேச்சுக்கள் இப்போது மொத்தமாகச் சுணங்க ஆரம்பித்திருக்கின்றன.

சமாதானப் பேச்சில் முழு முயற்சியாக இருந்து வந்த நோர்வே நாடும் என்ன செய்வதென்று புரியாமல் அமைதியாக வேடிக்கை பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

'இனி சமாதானம் என்பது எட்டாக் கனிதான்' என்று சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் ஆருடம் சொல்லுமளவுக்கு நிலைமை கீழேபோய் விட்டது.

'ஒன்றரை ஆண்டு காலமாக இலங்கைத்தீவில் நிலவிவந்த அமைதி, எப்போது வேண்டுமானாலும் காணாமல் போகலாம். இலங்கை இராணுவமும் புலிகளும் துப்பாக்கிகளைத் துடைக்க ஆரம்பித்துவிட்டன' என்று செய்திகள் பறந்துவந்து உலகத் தமிழர்களிடையே கவலையை படரவிட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த 'பொங்கு தமிழ்' என்ற கலைநிகழ்ச்சி அதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துவிட்டது.

ஈழத்தமிழர்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் இந்த 'பொங்கு தமிழ்' கலைவிழா, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் திரண்டு நிற்க... கடந்த வாரம் படு கலகலப்பாக நடந்திருக்கிறது.

'பதினாறு ஆண்டுகளுக்கு முன் சுதுமலையில் பிரபாகரன் பேசியபோது திரண்ட கூட்டம்தான் பிரமாண்டமான கூட்டமாக ஈழச்சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கிறது. அதற்கு இணையான கூட்டம் இப்போது கூடியிருக்கிறது' என்று சொல்லுமளவுக்குக் கூட்டமாம்.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற கோஷத்துடன் நடந்த இந்த விழாவில் தமிழர் பகுதியில் இருக்கும் இலங்கை இராணுவத்தை வெளியேறச்சொல்லித்தான் பொதுமக்கள் ஆக்ரோஷமான கோஷம் எழுப்பியிருக்கிறார்கள்.

தமிழர் பகுதியை இராணுவம் வளைத்திருப்பது மாதிரிப்போடப் பட்டிருந்த ஒரு செற், காண்போரை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. ஓர் ஓலைக்குடிசையை இராணுவம் பாதுகாப்பது மாதிரியும் அந்தக் குடிசையை ஒரு பாம்பு சுற்றி வளைத்திருப்பது மாதிரியும் 'நிருத்து' என்ற பிழையான தமிழில் ஒரு பலகையையும் கொண்டதாக இருந்த அந்த செற்றை (இராணுவத்தின் கட்டுப்பாட்டை) நிகழ்ச்சியின் முடிவில் தகர்ப்பது மாதிரி ஏற்பாடு.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செய்தித் தொடர்பாளர் சமன் அத்தாவுடஹெட்டியும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுமோகனதாஸ் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியற்றுறைப்பொறுப்பாளர் இளம்பரிதி பேசிய பேச்சுத்தான் ஈழத் தமிழர்களது இன்றைய எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது.

"தமிழர்களாகிய நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகவேண்டும். நீங்கள் (இராணுவம்) உங்கள் வீட்டுகுக் கிளம்புங்கள்...." என்று தொடங்கிய இளம்பரிதி, "எங்களது மக்களுக்காகத்தான் எல்லா அவமானங்களையும் சகித்துக்கொண்டோம். ஆறு கட்டமாகப் பேச்சுக்கள் நடந்த பிறகும் தமிழர்களின் மனிதாபிமானத் தேவைகள்கூட நிறைவேற்றப்படாததை ஆட்சேபிக்கிறோம்.

"இதனால்தான் எங்கள் தலைவர் பேச்சை தற்காலிகமாக நிறுத்தினார். அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகாவுடன் நித்தமும் திண்டாடிக்கொண்டிருக்கும் பிரதமர் ரணிலுடன் அரசியல தீர்வுகள் பற்றிப் பேசுவது சாத்தியமற்றது..." என்று முடித்திருக்கிறார்.

"இளம்பரிதியின் பேச்சுக்குக் கூடியிருந்த கூட்டம் கொடுத்த வரவேற்பு, இலங்கையில் மீண்டும் உள்நாட்டுப் போரைத் தொடங்கி வைக்கும் என்பதைத்தான் காட்டுகிறது" என்று சொல்லும் சர்வதேச அரசியல் நோக்கர்கள், இவர்கள் இன்னொரு ஆதாரத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"கிளிநொச்சி தமிழர் தேசியப் பேரவை, முல்லைத்தீவு கடலோரப் பகுதி மக்கள் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் சார்பில் பிரபாகரனுக்கு சமீபத்தில் மகஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதில், 'தமிழ் மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் எம் தலைவனே! உங்கள் மௌனத்தை, அமைதியை, பொறுமையை, சிங்கள அரசுப் படைகள் புரிய மறந்தார்கள். இதற்கு மேலும் நீங்கள் சிங்கள அரசிடம் நீதியும், நியாயமும் வேண்டி நிற்கக்கூடாது. லட்சியத்துக்காக உயிரைத் துச்சமாக மதிக்கும் பிள்ளைகளைத்தான் நாம் போருக்கு அனுப்பினோம். இனியும் அனுப்பிவைப்போம்' என்ற ஆக்ரோஷத்துடன் அந்த அமைப்புக்கள் தங்களது எண்ணத்தை எழுதியிருக்கின்றன. இதுபோன்ற கடிதங்கள் விடுதலைப் புலிகளின் தலைமையை உசுப்பி விடலாம்...." என்கிறார்கள்.

'இலங்கையில் தமிழர் அதிகம் வாழும் பகுதிகளை இணைத்து, அங்கே இடைக்கால நிர்வாகம் அமைத்து, அதை நிர்வகிக்கும் பொறுப்பைத் தங்களிடம் தரவேண்டும்' என்பதுதான் புலிகளின் கோரிக்கை. இதைப் பிரதமர் ரணில் ஏற்றுக் கொண்டாலும், ஜனாதிபதி சந்திரிகா ஏற்கவில்லை.

இதனால்தான் 'சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கும்வரை பிரதமர் ரணில் எதுவும் செய்யமுடியாது. அரசியல் அதிகாரம் இல்லாத ரணில் அரசு, சும்மா ஒப்புக்கொடுக்கும் வாக்குறுதியை நம்பி நாம் எதுவும் செய்துவிடக்கூடாது....' என்று சொல்லி, புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து விலகி நிற்கிறார்கள்.

இப்படி விலகிநிற்பதற்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிவாரண உதவிகள் பெறும் நன்கொடையாளர் மாநாடு சமீபத்தில் டோக்கியோவில் நடந்தது.

'சமாதானப்பேச்சு முடியும் தருணத்தில், ஆயுதங்களைக் கீழே போடவேண்டும்' என்பது முக்கிய நிபந்தனையாக அந்த மாநாட்டில் பேசப்பட்டதாம். இப்படியொரு நிபந்தனைபற்றி மாநாட்டில் பேச்சு வரும் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டுதான் மாநாட்டையே புலிகள் தவிர்த்ததாகவும் கூறப்படுகின்றது.

"நாங்கள் போர்நிறுத்தம் செய்து, ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்தும் போட்டுவிட்டு, அமைதியாக நிற்கிறோம். இதற்குமேல் எங்களைக் கட்டாயப்படுத்தமுடியாது. ஆயுதங்களை மொத்தமாக நாங்கள் இழக்க முடியாது. ஆயுதங்கள்தான் எமது பேரம் பேசும் வலு.எமது மக்களைப் பாதுக்காக்கும் கருவியும் அவைதான்" என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம், சமாதான முயற்சியில் இருக்கும் நோர்வே தரப்பிடம் கறாராகச் சொல்லி விட்டாராம்.

இந்த விஷயங்கள் இலங்கைப் பிரதமரின் முகத்தில் கவலை ரேகைகளை வெகுவாகப் படரவிட்டிருக்கிறதாம்.

இடைக்கால நிர்வாகத்துக்குச் சாதகமான வாக்குறுதியைப் புலிகளுக்குக் கொடுத்துவிட்டு அதற்கு சந்திரிகாவின் ஒப்புதலை வாங்க முடியாமல் ரணில் விழித்துக்கொண்டிருக்கும் அதேசமயம்...

'சமாதானமாகப் போகிறோம்' என்று சொல்லி உலக நாடுகளிடம் நிவாரணப்பணம் பெறப்பார்க்கிறார் பிரதமர் ரணில் என்று புலிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இவரைப் போலவே 1995இல் சந்தோசத்துடன் சமாதானக்கொடி பிடித்தவர்தான் சந்திரிகா. ஆனால், அந்தச் சமாதானப் பேச்சு ரொம்ப நாளைக்கு நீடிக்கவில்லை.

அந்தக்காயம் இன்னமும் ஆறாதவராக இருக்கும் சந்திரிகா, "புலிகள் சாத்தியமில்லாத கோரிக்கைகளை வைக்கிறார்கள். ஆயுதங்களை மீண்டும் கையிலெடுத்து எதிரிகளை, இராணுவ உளவாளிகளை ஒழித்துக் கட்டுகிறார்கள். போர் எப்போது தொடங்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், அதற்கான யூகங்கள் உள்ளன...." என்று இப்போது எச்சரிக்கத்தொடங்கி விட்டார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிப் பிரகடனமும் சந்திரிகாவின் இந்த எச்சரிக்கையும் ஈழத்தில் மீண்டும் ரத்தச் சிதறலுக்கு அடித்தளம் போட்டால், அது தமிழனின் துரதிர்ஷ்டம்தான்! ●

நிரந்தர இடம் உள்ளபோது

பிரதேச சபை அலுவலகத்துக்கு புதிய காணிக் கொள்வனவு ஏன்?

செயலரிடம் உதவி அரச அதிபர் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜூலை10

மாதகல் பிரதேச உப - அலுவலகத்திற்கென நிரந்தர காணி உள்ள போதும் பெரியவிளான் வரண தரைப் பகுதியில் புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டது ஏன்?

சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராஜா, வீலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயலரை கடிதம் மூலம் இவ்வாறு கேட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு வரை மாதகல் பிரதான வீதியில் பிரதேச சபை உப - அலுவலகம் இயங்கி வந்தது.

1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தில் அக்கட்டம் முற்றாக அழிவடைந்தது.

தற்போது பழைய கட்டம் இருந்த காணியில் மாதகல் பிரதேச சபை உப-அலுவலகம் அமைக்கப்படாமல் அதற்கென பெரியவிளானில் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதாகவும் -

எனவே, மேற்படி காணி கொள்வனவு செய்யப்பட்டதற்கான முழுமையான காரணம் குறித்து விளக்கம் தருமாறும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசா கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ஒ-9-185)

மட்டக்களப்புக்கான ரயில் சேவை வாழைச்சேனைக்கு அப்பால் நடைபெறாது

மட்டக்களப்பு,ஜூலை10

மட்டக்களப்புக்கான ரயில் சேவை நேற்றுமுன்தினம் முதல் வாழைச்சேனை ரயில் நிலையத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இடைநிறுத்தப்பட்டிருந்த மட்டக்களப்புக்கான ரயில் சேவை கடந்த முதலாம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச்சேவை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், இந்த தெரியாத நபர்கள் இச்சேவையை நிறுத்தும்படி மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து, இச்சேவையை வாழைச்சேனை வரை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில தரித்து நின்ற ரயில் ஒன்று பொலீஸ் காவலுடன் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(ஒ-3)

அபராதம் செலுத்தாதோருக்கு சிறைத்தண்டனைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தை செலுத்தத் தவறிய இருவருக்கு யாழ்நீதிமன்றம் கடுமியச் சிறைத்தண்டனை விதித்தது.

யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த அன்ரனி தேவதாஸ் என்பவருக்கு கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 20 ஆயிரம் ரூபா தண்டமும், 5 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இத்தொகையை குறிப்பிட்ட தவணைக்குள் செலுத்தத் தவறியமையால் மேற்படி நபருக்கு 2 வருட கடுமியச் சிறைத்தண்டனையும் -

இத்தகைய குற்றச்சாட்டின பேரில 30 ஆயிரம் ரூபா அபராதமும்,5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் அபராதமாக விதிக்கப்பட்ட இராவலின் தோட்டத்தைச் சேர்ந்த வாமதேவன் ஜெயராணி என்பவர் தர்மப் பணத்தைச் செலுத்திய போதும் தண்டப் பணத்தை முழுமையாகச் செலுத்தாத காரணத்தால் ஒரு வருட கடுமியச் சிறைத்தண்டனையும் யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவால் விதிக்கப்பட்டது.

(ஒ-5)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை சமாச மண்டபத்தில் காலை 10.00மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-12)

அனுமதியின்றி மணல் ஏற்றிவந்த டிராக்டர் அரசுடைமையாக்கப்பட்டது

சாவகச்சேரி நீதிமன்றம் நடவடிக்கை

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த டிராக்டரையும் அதன் பெட்டியையும் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குமாறு சாவகச்சேரி நீதிவானால உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த டிராக்டரையும் பெட்டியையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து பணத்தினை திறைசேரிக்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

இந்த டிராக்டரில் மணல் ஏற்றி வந்த சிவசம்பு சுகிராசா, எஸ்.சாந்தகுமார், இரத்தினம் நவநீதன் ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பெட்டியில் கொண்டுவரப்பட்ட மணலை சாவகச்சேரி சிவன் கோயில் திருப்பணிக்கு வழங்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

அனுமதியின்றி மணல் அகழ்ந்து டிராக்டரில் ஏற்றிவந்த மேற்படி நபர்களை சாவகச்சேரிப் பொலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோதே நீதிவான் மேற்கண்ட உத்தரவுகளைப் பிறப்பித்தார். (ஒ-117)

அநுராதபுரத்தில் இருந்து,

புராதனப் பொருள்களை கடத்தும் முயற்சி முறியடிப்பு

கொழும்பு,ஜூலை10

அநுராதபுரம் ஆட்சிக்காலத்தில் பிரபுக்கள் மற்றும் மகாசங்கநாயக்க தேரர்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் புராதன தொல்பொருள்களை வெளிநாடுகளுக்குக் கடத்திச்செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இரு தொகுதிகளாக வெவ்வேறு கப்பல்களில் இப்பொருள்கள் ஏற்றப்பட்டிருந்த வேளையில் சுங்கத் திணைகளத்தில் அதிகாரிகளால் அவை கைப்பற்றப்பட்டன. இப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமை ஆக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதிப் பொருள்களுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பொருள்களின் ஒரு தொகுதி நெதர்லாந்து நாட்டுக்கும் மற்றைய தொகுதி பிரிட்டனுக்கும் கொண்டு செல்லப்படவிருந்தன. (ஒ)

பாக்.புகழுக்குப் பங்கம் விளைவித்தாரென அக்தார் மீது நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு!

பாகிஸ்தானின் புகழுக்கு பங்கம் விளைவித்தாரென பாக்.கிரிக்கெட் வீரர் சொஹைப் அக்தார் மீது நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வருமாறு நீதிமன்றம் அக்தாருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

வேகப் பந்து வீச்சாளரான அக்தார், கடந்த மாதம் இங்கிலாந்தின் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பாக். அணியின் சக வீரர்களைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

"கிளென் மெக்ராத், ஜேஸன் கிலெஸ்பி போன்றோருடன் நான் ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடி இருந்தால் அவர்களைவிட சிறப்பாக முன்னேறியிருப்பேன். வேறு எவரையும் விட நான் கூடுதலான விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருப்பேன்.

ஆனால், பாகிஸ்தான் அணியில் வஸிம் அக்ரம், வக்கார் யூனிஸ் போன்றோர் சரிவுற்றிருந்த போது அவர்களுடன் விளையாடினேன்.

அவர்கள் சிறந்த வீரர்களாக இருந்தவர்கள்தான். ஆனால், இனியும் போட்டியில் வெற்றியீட்டிக் கொடுக்கக் கூடியவர்களாக அவர்கள் இல்லை."

-இவ்வாறு அக்தார் தெரிவித்திருந்தார்.

சக வீரர்கள் மீதான அக்தாரின் விமர்சனங்கள் பாகிஸ்தானின் புகழுக்குப் பங்கம் விளைவித்துள்ளன என லாகூர் நீதிமன்றமொன்றில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கிலாந்தின் தர்ஹாம் பிராந்திய அணிக்காக விளையாடி வரும் அக்தார், முதல் கட்ட விசாரணைக்கு சமுகமளிக்கமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை,ஜூலை10

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எழுவைதீவு மற்றும் அனலைதீவு பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு அனலைதீவு சதாசிவ வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் குகணேசுவிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அனலைதீவு ஆதார வைத்திய சாலை வைத்திய அதிகாரி திருமதி ஜானகி நித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-5-16)

மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை10

தமிழீழ விளையாட்டுத்துறை தேசிய ரீதியாக நடத்தும் கனிஷ்ட பிரிவினர்களுக்கான மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

கிளிநொச்சி மற்றும் பரந்தனில் உள்ள மைதானங்களில் நடைபெறவுள்ள இப்போட்டியில் 13, 15, 17 மற்றும் 19 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து வரும் அணிகளும், சுவிஸில் இருந்து வருகை தரும் புலம்பெயர்ந்த தமிழ் வீரர்களைக் கொண்ட அணிகளும் பங்குபற்றவுள்ளன. இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

13வயதுப் பிரிவு

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

* காலை 8 மணி - திருமலை மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.
* மாலை 3.30 மணி - சுவிஸ் அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

15வயதுப் பிரிவு

பரந்தன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

* காலை 8 மணி - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

17 வயதுப் பிரிவு

பரந்தன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

* காலை 9.30 மணி - அம்பாறை மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.
* மாலை 5 மணி - முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

19 வயதுப் பிரிவு

கிளிநொச்சி மைதானத்தில் நடைபெறும்.

* காலை 9.15 மணி - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் சுவிஸ் அணி.
* மாலை 5 மணி - திருமலை மாவட்ட அணி எதிர் அம்பாறை மாவட்ட அணி. (ம-5-78-86)

கொடிவாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் அபிவிருத்திக்கான கொடிவாரம் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

கடந்த ஜூன் மாதம் நடைபெறவிருந்த இக்கொடி வாரம் பிற்போடப்பட்டு தற்போது தேசிய மட்டத்தில் நடைபெறுகின்றது. (எ-8)

திருமலை சென்.ஜோசப் கல்லூரியின் விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலைக்கு மாணவர்களை தெரிவுசெய்யப் பரீட்சை

திருமலை,ஜூலை10

சென் ஜோசப் கல்லூரியின் விளையாட்டுப் பயிற்சி பாடசாலைக்கு 2003ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி சனியன்று கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இம்முறை வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 75 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் 026-22036 எனும் கல்லூரி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இது தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதுவரை விண்ணப்பிக்காத தற்போது 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் (01.02.1990 முதல் 31.01.91 வரையான காலப்குதியில் பிறந்தவர்கள்) 12 ஆம் திகதி நடைபெற விருக்கின்ற நேர்முகப் பரீட்சையின் போது நேரடியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு

நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் விளையாட்டுத் தொடர்பான செயல்முறைப் பரீட்சை என்பவற்றின் மூலம் இவ்வருடத்திற்கான 15 மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு தொடர்ந்து 4 வருடங்களுக்கு அரசினால் புலமைப்பரிசில் அடிப்படையில் இலவச தங்குமிட வசதி, உணவு, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சி, மேலதிக பாட லகுப்புகள் என்பன வழங்கப்படும்.

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை10

சாவகச்சேரி செருக்கலப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிமுதல் 10.30மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (எ-10-6-152)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை10

வட்டுக்கோட்டை பேச்சியம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (எ-10)

யாழ்ப்பாணம்,ஜூலை10

காரைநகர் சடையாளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (எ-10-6)

* * *

குருநகர்,ஜூலை10

யாழ். கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-10-51)

யூனிவேர்சல் கல்வி நிலையம்
மந்திகை

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

1. Micro Soft Office
2. Visul Basic
3. Java

ஆகிய பிரிவுகளுக்கான பதிவுகளை 15.07.2003இற்கு முன்னராக பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(வி-28843) (24-14-18) - நிர்வாகம்.

மரண அறிவித்தல்

திருமதி பொன்னுத்துரை புஸ்பராணி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை புஸ்பராணி அவர்கள் நேற்று (09-07-2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் தர்மாம்பாள் (இந்தியா), ரஞ்சினிதேவி (ரஞ்சி), மகேந்திரன் (ஜோமனி), ரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-07-2003) வியாழக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
K.ரஞ்சன் (மருமகன்).

(19-24-14-18) (20053)

கூரை அமைப்பில் புதிய அலை
அன்டன் சுபர் ஷெல்டா
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை

அன்டன் சுபர் ஷெல்டா
- 25 மீற்றர் நீளம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட உயர்வானது
- துருவாகாது வேய்யலாம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- அரிக்காது
- வெப்பம் இடைமறிப்பது
- 20 வருட காலத்துக்கு மேல் நீடித்து உழைக்கக்கூடியது
- நிறம் மாறாது

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்.
இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்ரன் ரூவ்பிங் (பிறைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, கொழும்பு 10
தொ.பே: 324261-5, 337283-5 ஃபெக்ஸ்: 446534

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

அன்பே கடவுள்

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் (10.07.2003)

இந்திய ஸ்தபதி **பொன்னான வாய்ப்பு**

ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாண நகரில் எழிலுடன் அமைந்திருக்கும் காத்தற் கடவுளான எம்பெருமான் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் ஆலயத்திற்கு திருப்பணி வேலைகள் செய்வதற்கு எனக்குக் கிடைத்திருக்கும் இந்தப் பொன்னான வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இவ்வேளையில், என்னுடன் இணைந்து பணியாற்றிய ஏனைய கலைஞர்கள் அனைவருக்கும் ஆலய அறங்காவலர் சபைக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்நன்னாளில் அனைவருக்கும் சமாதான சகவாழ்வு கிடைத்திடவேண்டி எல்லாம்வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

ஓம் நமோ நாராயணாய நமஹ!

உங்கள் ஆசியுடன்
ஸ்தபதி கி.மணிகண்டன் (இந்தியா).

(20056) (24-14-18)

11 ஆம் ஆண்டு நினைவலைகள்

பூவுலகில் 14 - 09 - 1916

விண்ணுலகில் 10 - 07 - 1992

அமரர் தம்பிப்பிள்ளை வீரசிங்கம்

திதி-10-07-2003

11ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு மாறாது !

பேரன் 2 பேர்கள் நினைவில் வாழும் :

கம்பளை இல்லம்,
கட்டைப்பிராய்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(20071) (32-14-16-31)

மரண அறிவித்தல்கள்

ஆறுமுகம் ஜெயகுமார்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஜெயகுமார் 07.07.2003இல் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (சாரதி C.T.B) நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் உதயகுமார் (ஜேர்மனி), சானுதேவி, வதனசோதி (ஆசிரியை, திருநெல்வேலி நோ.க.த.க. பாடசாலை), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகம் (எழுதுமட்டுவாழ்), சுந்தரேஸ்வரன் (கொக்குவில் தபாலகம்), பபா (ஜேர்மனி), எவ்லின் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கஜானனின் (யாழ். மத்தியகல்லூரி தரம் 8 மாணவன்) அன்பு மாமனாரும் ஏரியலின் (கனடா) பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செல்வநாயகம், சுந்தரேஸ்வரன்
(மைத்துனர்கள்)

இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.

(20074) (31-14-16)

திருமதி தவமணி உலகநாதன்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி உலகநாதன் அவர்கள் 08-07-2003 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சின்னத்துரை உலகநாதனின் (அதிபர், வ/செட்டிக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா) ஆருயிர் மனைவியும் காலஞ்சென்ற திருதிருமதி பரமசிங்கம் பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்துரையின் அன்பு மருமகளும் அச்சுதநாத், பிரசன்னன், தனசங்கர், மாதங்கி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தேவராஜா (ஆசிரியர்) மற்றும் தனபாலன், ஜோகநாதன், காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் சபாநாதன் (கஜன் மோட்டர்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-07-2003) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

17A. U.C.குவாட்டர்ஸ்,
குருமன்காடு,
மன்னார் றோட், வவுனியா.
T.P.074-689044.

தகவல்:
சி.சபாநாதன்
(கஜன் மோட்டர்ஸ்)

(20069) (32-14-16-31)

திருமதி ருக்மணி அப்புத்துரை

சங்கானையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்மணி அப்புத்துரை அவர்கள் நேற்று 09.07.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகர் அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லர் பாலி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற முருகர் ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் பிரமிளா, பிரகலாதன் (பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீட கணனியியல் துறை செயன்முறை காட்டுநர்), பிரசாந்தன் (பிரான்ஸ்), அனுராகன், பிரசாந்தி, (மானவி, அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்லக்கண்டு, துரைச்சாமி (சுவிஸ்), பரமேஸ்வரி, சரஸ்வதி (பிரான்ஸ்), இராமேஸ்வரி (பிரான்ஸ்), தர்மகுலசிங்கம் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அழகரத்தினம் குணரத்தினம் (பிரான்ஸ்), நாகம்மா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இந்திராணி, செல்வரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சந்திரகுமாரின் (சவூதி அரேபியா) மாமியாரும் சிந்துஜா, நிருஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2003) வியாழக்கிழமை பி.ப. 3மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'திருப்பதி'
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல் :
மு. அப்புத்துரை (கணவர்),
யோ.பு.குணரத்தினம் (சகலன்)

(20073) (31-14-16)

கந்தையா கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம், நல்லூர், ஆடியபாத வீதியைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் க.க.கணபதிப்பிள்ளை 2003.07.09ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா வாத்தியார் (முன்னாள் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர்) அவர்களின் அன்புச் சகோதரரும் கனகசபை, கனகரட்ணம் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் செல்வராசா (லண்டன்), சுவர்னேஸ்வரி (லண்டன்), ஜெகநாதன் (அமெரிக்கா), லோகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்தானலட்சுமி, தவமணி, அமுதராணி, கனகசிங்கம், கிரிஜா, ஸ்ரீதரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசவன், ஸ்ரீராம், தனுசியா, மஞ்சுளா, பிரேமலதா, கோபிதன், அஞ்சலா, சாமளா, டாக்டர் சதீசன், சாலினி, சசீலா, ஜெய்சன், கமலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கிருத்வனியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

14, இராசவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P:No : 0777-297504.

தகவல் :
க.க.கனகரட்ணம் (மகன்)
மற்றும் மக்கள், மருமக்கள்.

(20077) (31-14-16)

கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (எ)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும்
சிரிராஜ், சேரன், நாசர் நடித்த
ஸ்ருடன்ட் No 1
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.)
(C28667) (31-14-16)

ராஜா யாழ்ப்பாணம்
இவரை விக்ரம், ஜோதிகா, விவேக்
தூள்
தினசரி: 10.30,2.30,6.30, 9.30
12முதல் பிரியமான தோழி
(C28668) (31-14-16)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், மீனா, ஜோதிகா நடித்த
ரிதம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE LORD OF THE RINGS
தினசரி இரவு 8.45 இற்கு
(C28685) (31-12-17)

லக்ஷ்சுமி சினிமா
இனுவில்
சரத்குமார், தேவயானி
ஆனந்தராஜ், மணிவண்ணன்
நடித்த (ரீல்ஸ்)
சூரியவம்சம்
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பு.நே.)
(C/28663) (31-14-16)

லிபேட்டி அச்சுவேலி
புதிய வெளியீடு
முரளி, அப்பாஸ், தேவயானி, வையாபுரி, மணிவண்ணன் நடிப்பில்
காதலுடன் (ரீல்ஸ்)
தினசரி காட்சி நேரம் 3.00, 7.00 (பு.நே.)
THE MUMMY
கொரில்லாப்படம் (ரீல்ஸ்)
தினசரி காலை 11.00 மணிக்கு
(C/28683) (31-12-17)

ரைப்பிஸ்ட் தேவை
கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்த பெண பிள்ளைகள் தேவை.
S.T.R.
81, பலாலி வீதி, கந்தர்மடம்.
(32-14-16) (20075)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
2005 A/L
பொது
இரசாயனம்
திரு: மகேஸ்வரன்
(B.Sc.,Phd.M.Phil.)
நேரம்: (6.00a.m.,4.00 p.m.)
ஆரம்பம்: 11.07.2003
வெள்ளி
(20049)
(14-18-24-16-31)

இலங்கை அரசு

வடக்கு - கிழக்கு மாகாண சபை
வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இல.2880 - சி.இ. (C.E.)
தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
(நிர்மாண வேலைகள்)

கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.(I.F.B.)

ஐ.எவ்.பி. இல:- MA/NEERP/CLG/02 திகதி:- 2003.07.08

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிரும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02. மாவட்ட செயலாளர், மன்னார், இலங்கை அவர்களால் முடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதி நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03. மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான, மன்னார் மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft), காசுக் கட்டளையாகவோ (Money Order) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் அவர்களிடமிருந்து 2003.08.18 ஆம் திகதி 15.00மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னாரில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
எஸ்பிளனேட் றோட்,
மன்னார்.
தொலைபேசி இல:- 023-2232267 தொலைநகரி இல:- 023-2232269

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன், மன்னார் மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2003.08.19 ஆம் திகதி 15.00மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச் சபை, மாவட்டச் செயலகம்,
கச்சேரி, மன்னார்.

அதேதினம் 11.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

அட்டவணை

கேள்வி குறிப்பீடு இலக்கம்	வேலை விவரம்	கேள்விப்பிணை ரூபா	கேள்வி ஆவணங்களின் விலை ரூபா	வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம்
MA/NEERP/CLG/CB/1	முசலி பிரதேச சபையின் பொது நூலகக் கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/2	மாந்தை மேற்கு பிரதேச சபை பொது நூலகக் கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/4	மன்னார் பிரதேச சபையின் திருக்கேதீஸ்வரம் உப அலுவலகக் கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/5	மாந்தை மேற்கு பிரதேச சபை அடம்பன் உப அலுவலகக் கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/6	முசலி பிரதேச சபையின் பொற்கேணி உப அலுவலகக் கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/9	மன்னார் பிரதேச சபையின் உயிலங்குளம் உப அலுவலக கட்டடம் புனரமைத்தல்	34,000.00	250.00	06 மாதங்கள்

07. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 03ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்டஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் கொண்டிருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகுதியைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

வே.விஸ்வலிங்கம், மாவட்டச் செயலாளர்,
மன்னார்.
2003.07.07.

(சி-28838) (24-18-15-14-16)

சிறையிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நீதிமன்றிலிருந்து பிணையில் வெளியே எடுத்திருந்தார்.

நண்பகல் 12 மணியளவில் பிணையில் விடுவிக்கப்பட்ட ஸ்ரீகாந் தன் வீட்டுக்குத் திரும்பியபோது நிறைபோதையில் இருந்தார் என்று கூறப்படுகிறது.

வெறிபிடித்துக் காணப்பட்ட அவர், கையில் கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு பிள்ளைகளைத் தேடியிருக் கின்றார். முதலில் தனது மூத்த மகனைப் பிடித்து இழுத்து "ஏனடா என்னைப் பார்க்க சிறைக்கு வரவில்லை" என்று கேட்டு அதட்டியவாறு சிறுவனது கையில் கத்தியால் வெட்டினார் என்றும், அப்போது வலி தாங்கமுடியாத சிறுவன் உரத்து கதறியவாறு தந்தையின் பிடியிலிருந்து தப்பியோட முற்பட்டவேளை கத்தியால் வேகமாக வீசி அவனது கழுத்தில் வெட்டினார் என்றும் கூறப்படுகிறது.

சிறுவன் அந்த இடத்திலேயே துடி துடித்து வீழ்ந்தான். இந்தக் கோரச் சம்பவத்தை நேரில் கண்ட சிறுவனின் தாயும் சகோதரர்களும் அலறியடித் துக்கொண்டு அயலவர்களின் உதவியைக் கோரியவாறு ஓடியிருக்கின்றனர். தனது மூத்த மகனின் கழுத்தைச் சீவிய பாதகத் தந்தை தனது கொலை வெறி தணியாது ஏனைய பச்சிளம் பாலகர்களையும் கொல்வதற்காக விரட்டிச் சென்றார்.

அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிவந்து பார்த்தபொழுது அங்கு பிரஸ்தாப சிறுவன் கழுத்து அறுபட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தான்.

அவனை வெட்டிக் கொன்ற தந்தை தனது ஏனைய பிள்ளைகளையும் வெட்டுவதற்காக துரத்திக்கொண்டிருந்ததை அயலவர்கள் கண்டனர். நிலைமையைப் புரிந்துகொண்ட அயலவர்கள், கொலைஞ்ஞனைத் துரதிச் சென்று மடக்கிப்பிடித்து மரமொன்றில் கட்டி நையப்புடைத்து விட்டு மானிப்பாய் பொலீஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனர். சற்று நேரத்தில் அங்கு வந்த பொலீஸார், கொலைக்காரத் தந்தையைக் கைது செய்தனர். அவருடன் அவரது மனைவியையும் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பாய் ஒன்றினால் மூடப்பட்ட நிலையில் சிறுவனின் சடலம் நேற்று மாலைவரை அந்த இடத்திலேயே கிடந்தது. ஏராளமான பொது மக்கள் அங்கு வந்து சிறுவனின் சடலத்தைப் பார்வையிட்டனர்.

மாலை 5.30 மணியளவில் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சிறுவனின் சடலத்தைப் பார்வையிட்ட யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். அதனையடுத்து மாலை 6 மணியளவில் சிறுனின் சடலம் மானிப்பாய் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. மரணவிசாரணை பிரேத பரிசோதனை என்பன இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவனின் தந்தையை இன்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் பொலீஸாருக்குப் பணித்தார்.

மன்னார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு தனியார் நிறுவனங்கள் இந்தகைய ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கரு ஜயசூரிய மேலும் கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினரான பீலிக்ஸ் பெரேரா(பொ.ஐ.மு.) உரையாற்றுகையில், இச்சட்ட மூலத்துக்கு எதிர்க்கட்சியினர் பூரண ஆதரவு வழங்குவார்கள்- என்றார். (எ)

யு.எஸ். எயிட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக அவர்கள் இங்கு கலந்துரையாடினர். (ஐ-8)

இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் கூடி ஆராய்ந்தன. இந்த ஆராய்வு இரண்டு மணித்தியாலங்கள் நீடித்தது.

இது தொடர்பாக ஹிஸ்புல்லாஹ் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான பேச்சுக்களின் போது முஸ்லிம் எம்.பிக்கள் குழு தனித்தரப்பாகவே கலந்துகொள்ளும். இக்குழுவிற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமை தாங்குவார். இது விடயம் தொடர்பாக முஸ்லிம் எம்பிக்கள் இன்று நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத்தில் மற்றொரு சந்திப்பை மேற்கொள்வர்.

வன்னிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச்செல்லும் நடைமுறை இருந்து வந்தது. தற்போதைய புதிய நடைமுறை காரணமாக வன்னிக் கான எரிபொருள் விநியோகத்தில் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படலாம் எனக் கூறப்பட்டது. (எ-164)

வரதர் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் 24ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று 29ஆம் வார்ட்டிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவருக்கு பாதுகாப்பு அளிக்கும் முகமாக ஆயுதத்துடன் ஆறு இராணுவத்தினர் வார்ட்டில் கடமையில் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளனர். (ஐ-12)

மாத இறுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த மாதம் நோர்வே ராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சிநேகபூர்வமான ஒரு சூழ்நிலையில் சந்தித்தனர்.

இடைக்கால நிர்வாகத்தில் தாங்கள் வகிக்கும் பங்கு குறித்து விடுதலைப் புலிகள் கொண்டிருக்கும் கரிசனையைக் கருத்திற்கொண்ட வையாக அரசின் முன்னைய யோசனைகள் அமையவில்லை. வடக்கு - கிழக்கில் புனர்நிமாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவதையுமே அந்த யோசனைகள் பிரதான விடயங்களாகக் கொண்டிருந்தன. எவ்வாறாயினும், இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் புலிகளுக்கான அரசியல் பங்கு, பணி, குறித்து அடுத்துவரும் யோசனைகள் மிகத் தெளிவான ஒரு வரையறையைக் கொண்டிருக்கும்; சமாதானப் பேச்சுக்களுக்கான மேடையை அது அமைக்கும்.

அப்போது யோசனைகளின் விவரங்களைப் பேச்சுக்கள் பூர்த்திசெய்வதோடு, சீர்படுத்தவும் செய்யும். என்ன தேவை என்பதை அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது. மேலும் ஒரு படி முன்னேறிச் செல்ல அரசாங்கம் தயாராக இருக்கிறது. விடுதலைப் புலிகள் கூறும் 'அடிப் படை அரசியல் விடங்கள்' குறித்து பேச அரசாங்கம் தயாராக இருக்கிறது.

அரசாங்கம் எவ்வாறான நிபந்தங்களின்கீழ் இருக்கிறது என்பதை விடுதலைப் புலிகள் அறிந்திருக்கின்றனர்.

-இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

கண்ணீர் அஞ்சலி

எமது விரிவுரையாளர் அப்புத்துரை பிரகலாதனின்
அன்புத் தாயாரான
திருமதி ருக்மணி அப்புத்துரை
09.07.2003 (புதன்கிழமை) நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னாரது குடும்பத்தவரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்ளும் அதேவேளை, அன்னாரது ஆத்மாசாந்தி அடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர்கள்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

(32-14-17-31)

வர்த்தகத்துறையில் முன்னுதாரணமானவரை மனமார வாழ்த்துகின்றோம்

உயர்திரு. குமாரசாமி கங்கைவேணியன் J.P.
வேணி களஞ்சியம் - யாழ்ப்பாணம்

மக்கள் நலன் காக்கும் பிரிவு ஒன்றை தமது ஸ்தாபனத்தில் ஆரம்பித்து அதற்கென்று ஒரு நடைமுறைக்கணக்கு வைத்து

அதிலே
1. ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கல்.
2. கிராமம் கிராமமாகச் சென்று கண் பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல்.
3. நோயுற்றவர்களுக்கு மருந்துகள் வழங்கல்.
4. ஆலயங்களின் திருப்பணிக்கு உதவுதல்
5. பசுக்களை, இடபங்களை வதைப்பதைத் தடுத்து நிறுத்தல்

போன்ற நற்பணிகளுக்கு தமது சொந்தப் பணத்தை மனமாரச் செலவு செய்த உத்தமரை, ஓர் உயிரையும் கொல்லாமை என்ற விரதத்தை அனுஷ்டிப்பவரை, தான் இறந்த பின்னர் தன்னுடைய இரு கண்களையும் கண்தெரியாத இருவருக்கு கண்தானம் வழங்க உறுதி அளித்தவரை, தனது குடும்பம் போன்று சக ஊழியர்களின் நலன்களைக் கவனித்து நடத்துபவரை, 1996இற்குப் பின்பு ஐந்து ஆலயங்களைத் தலைமை வகித்து கும்பாபிஷேகப் பெருவிழாவை இனிதே நடத்தி வைத்தவரை, சத்திரத்துச் சந்தியில் ஆட்சி நடத்தும் வைரவப் பெருமானுக்கு பெருங்கோயில் அமைத்தவரை, வர்த்தகத்துறையிலே ஈட்டுகின்ற இலாபத்திலே ஒரு பங்கை மனமார ஏழைகளின் கைகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் வழி சமைத்து வர்த்தகர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்குபவரை, அகில இலங்கைக்கும் சமதான நீதிவானாகத் திகழ்பவரை, எமது தீவகத் தாய் பெற்றெடுத்தாள் என்ற பெருமையில் நாம் வாழ்த்துகின்றோம்; வரவேற்கின்றோம்; திறமைக்களிப்பில் திகழ்கின்றோம்.

உரிமையாளர் ~ வரன் வெற்றிலைக்கடை,
96, மேற்கு மார்க்கெட், யாழ்ப்பாணம்,
உரிமையாளர் ~ சிவகுமார் வெற்றிலைக்கடை,
88,89, மேற்கு மார்க்கெட், யாழ்ப்பாணம்.

(20023) (31-14-16)

எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
தனுஷ், சோனியா, அகர்வால் நடித்த
காதல் கொண்டேன்
நிதர்ஷன் வீடியோ
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.
T.P-0777-178155
0777-964913
(20076) (32-14-16-31)

புதிய வீடியோ CD வெளியீடு
காதல் கொண்டேன்
பிரதிகள் உடன் பெறலாம்.
★ புதிய போஸ்டர்கள் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
(C28855) (32-14-16-31)

மரணவாகனே!
உங்கள் ஆய்வுக்கட்டுரைகள் ஒரே நாளில் உங்களால் எழுதப்பட்டவையா ?.?.?
ஆனால் அவற்றை குறுகிய காலத்தில் சிறந்த முறையில் கணனி மூலம் பதித்து பைண்டிங் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ராம் பிறின்ரேஸ்
51 இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்கள்

கதிரவேலு சர்வேஸ்வரன் (ராசம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு சர்வேஸ்வரன் நேற்று (09.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.

தாவடி வடக்கு,
மானிப்பாய் வீதி,
கொக்குவில். (சி-28857) (31-14-16)

பொன்னையா தங்கராசா (பத்தர்)

(பார்மனியம் வீதி - தெல்லிப்பழை)

தெல்லிப்பழையைச் சேர்ந்த பொன்னையா தங்கராசா நேற்று (09.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் லிங்காயினி, பிரபாகரன், தயாபரன், குருபரன் (சிறி கண்ணா நகைமாடம், K.K.S. வீதி, இணுவில்), சுதாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ் கந்தராசா (லண்டன்), சிவராசா (சிவன் நகைமாடம், மல்லாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சயிதன், கிருபன், தனுசன் ஆகியோரின் பேரனும் ரத்தினம், சின்னம்மா, இராசமணி, தங்கரத்தினம், இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருளானந்தம், பரமசிவம், தவமணி, தம்பிராசா, கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2003) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

- குடும்பத்தினர்.

சின்னாமலை வீதி,
சுதுமலை, மானிப்பாய். (20078) (31-14-16)

பரமராசா சிவஞானவதியார் (சங்கரத்தை)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானவதியார் நேற்று (09.07.2003) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமராசா (மேர்க்கன்ரைல் வங்கி, யாழ்ப்பாணம் - முன்னாள் சிறாப்பர்) அவர்களின் அன்பு மனைவியும் கதிரமலையின் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அன்புச் சகோதரியும் செல்வராணி, தவராணி, குகராஜன் (உரிமையாளர் - கேசன் இலத்திரனியல், சங்கானை - கோகுலன் ஐஸ்கிறீம், சங்கரத்தை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவநேஸ்வரன் (ஆங்கில ஆசிரியர், அ.மி.த.க. பாடசாலை, துணைவி, சங்கரத்தை), சிவலிங்கம், வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் சத்தியராஜ் (பிரான்ஸ்), சிவதர்சினி (ஆங்கில ஆசிரியை, சித்தன் ஸ்ரீ கணேச வித்தியாசாலை), சிவகௌமினி, ராதிகேஷன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), சனாதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2003) வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குகராஜன் (மகன்)
கோகுலன் ஐஸ்கிறீம்.

கோகுலன் ஐஸ்கிறீம்
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (31-16-14)

சிவமயம்

பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையுள்ள அநுஷலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரி திருவளர் செல்வி
கம்ஷனா
அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து, வைபவத்தினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

'கனகா பத்திரிகை விற்பனையகம்'
இல.06. பலாலி வீதி. திருநெல்வேலி.

திருமதி நவரத்தினம்
அண்ணன்மார் : வினோதன் (லண்டன்), வசந்தன்
இல. 60, பலாலி வீதி, திருநெல்வேலி

குறிப்பு : தவறுதலாக அழைப்பிதழ் தரப்படாதிருந்தால் தயவுசெய்து இந்த அழைப்பை நேர்முக அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

(18615)(31-14-16)

கண்ணி அகற்றும் பணிகள் குறித்து செயலகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது

வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம்,ஜுலை10

வடக்கு- கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச நிறுவனங்கள் தமது பணிகளை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் தொழில் நுட்பப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் இயங்கும் கண்ணி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவில் நேற்றுமுன்தினம் கூடிய கண்ணி அகற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த விடயம் பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.

வன்னியில் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ், நோர்வே நாடுகளின் அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தில் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய அமைப்புகளின் பிரதிநிதிகள், டெனிஸ் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள், சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க நாட்டு கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களான வில்லியம் றீட், டிபோறா வெட்லண்ட் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு அமைப்புக்களும் தாம் பணிபுரியும் பிரதேசங்களில் கண்ணி அகற்றுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக்கூறின. அந்தப் பகுதியில் பிரயோகிக்க வேண்டிய தொழில்நுட்பம் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர்.

சில பகுதிகளில் மண்வளம் கடுமையாக இருப்பதால் அந்தப்பகுதியில் எந்த வகையில் கண்ணிகளை அகற்றுவது சாத்தியம் என்பது குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

கலந்துகொண்ட பிரதிநிதிகள் தமக்கிடையே அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

விரைவாக கண்ணிகளை அகற்ற புதிய நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. (ம-3)

கல்வியியற் கல்லூரி ஆண்டுவிழாவில் தமிழக அறிஞர்களும் பங்கேற்பு!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு தினம் மற்றும் செஞ்சொற் செல்வர் ஆசிரியர் ஆறு.திருமுருகன் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகளில் தென் இந்தியாவின் தஞ்சாவூர்ப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு அறிஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று மாலை 4.30 மணிக்கு யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு தின நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விலேயே ஆசிரியர் ஆறு.திருமுருகன் கல்வியியற் கல்லூரிச் சமூகத்தால் "சிவநெறித் தவமகன்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

இவற்றில் கலந்துகொள்வதற்காகவே தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி, தத்துவமைய இயக்குநர் பேராசிரியர் க.பாஸ்கரன் ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

டாக்டர் வைதியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், இந்துசமயப் பேரவைத் தலைவர் சீ.விநாசித்தம்பி ஆகியோரும் வாழ்த்துரைகளை விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்படப் பலரும் வழங்கவுள்ளனர். நிகழ்வின் இறுதியில் கல்லூரி மாணவின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(ம-10)

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் யாழ்.கம்பன் கோட்டத்தில் நடத்தப்பட்ட 'வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்கு' எனும் கருத்தரங்கில் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் பி.கு.கிரஞ்சி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

அம்புலன்ஸ் சாரதி இல்லை

தெண்மராட்சி,ஜுலை10

பளை ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் வண்டி இருந்தும் சாரதி இல்லாததால் கடந்த ஒரு மாதகாலமாக அது சேவையில் ஈடுபடாமல் உள்ளது. இதனால் பளைப்பகுதி நோயாளர்கள் தனியார் வாகனங்களில் சிரமங்களின் மத்தியில் யாழ்போதனா வைத்தியசாலைக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-1(7)

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்கு லங்கா சமசமாஜக்கட்சி எதிர்ப்பு

கொழும்பு,ஜுலை10

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தம் பற்றி பொதஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சி என்ற முறையில் ஜனாதிபதியினால் இதுவரை எமக்கு எதுவிதமான விவரங்களும் தெரிவிக்கப்படவில்லை. இனப்பிரச்சினை விடயத்தில் சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென விரும்பும் நாம், அதற்கு எதிராகச் செயற்பட எண்ணும் அரசியல் கட்சியோடு இணைக்கப்பாட்டுக்கு வருவது சாத்தியமான தொன்றல்ல.

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பேர்ட்டி வீரக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் சமாதானமும் பொருளாதாரமும், அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையும் நிலைநாட்டப்பட வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்பது உலக நாடுகளினதும் கருத்தாக இப்பொழுது உருவாகியுள்ளது. இதனை நாம் அசட்டை செய்து விட முடியாது.

சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்யமுனையும், ஜே.வி.பியினர், பதவியிலுள்ள அரசாங்கத்தை அகற்றி விட்டு, புதியதோர் அரசாங்கத்தை அமைப்பதில் மட்டுமே ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனரெனத் தெரிகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வில் இவர்கள் எவ்வித அக்கறையும் கொண்டவர்களல்லர். ஜே.வி.பியின் அறிக்கைகளும், அவர்கள் ஆற்றும் உரைகளும் அதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகைய கட்சியுடன் சுதந்திரக் கட்சி செய்துகொள்ளப்போகும் - எமக்கு தெளிவுபடுத்தப்படாத - கலந்தாலோசிக்காத - எவ்வித உடன்படிக்கைகளுக்கும் லங்கா சமசமாஜக்கட்சி துணைபோகவோ, அல்லது இணக்கம் காட்டவோ போவதில்லை. இதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி பேச்சுக்கு அழைக்கும் முயற்சிகள் துரிதம்!

ஐ.தே.கட்சி பேராளர் கூட்டத்தில் வேலாயுதம் எம்.பி.

பதுளை,ஜுலை10

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரும் அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. புலிகளின் கோரிக்கைகள் ஏக காலத்தில் நிறைவேற்றி வைக்கப்படும். எதிர்க்கட்சியினர் புலம்பிக் கொண்டிருப்பதைப் போன்றதான யுத்த சூழல் ஒன்று இந்நாட்டில் இனிமேல் ஏற்படாது என்பதை உறுதியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

- இவ்வாறு கூறினார் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தேசியத் தோட்டத்தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளருமான க.வேலாயுதம்.

எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் சமீபத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேராளர் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பேராளர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

வேலாயுதம் எம்.பி. இங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

"நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்திருந்த வேளையிலேயே இந்நாட்டு மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய தேசிய முன்னணியிடம் வழங்கினர். யுத்தம்நிறுத்தப்பட்டு சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஐக்கிய இலங்கை என்ற கட்டுக்கோப்புக்குள் நாடு துரிதமாக அபிவிருத்தி செய்யப்படும் என்ற உறுதியுடனேயே எமது அரசு பதவியேற்றது. அந்த இலக்கை நோக்கியே இன்று அரசு சென்று கொண்டிருக்கின்றது.

நாம் இதுவரை காலமும் வந்த பாதை மிக மிக கரடுமுரடானதாகும். ஆனால், எமது எதிர்காலப் பாதையோ மிகுந்த தெளிவைக் காட்டுகின்றது. அனைத்து மக்களினதும் ஆசியுடன் அப்பயணம் தங்குதடைகள் இன்றி முன்னேறிச் செல்லக் கூடியதாக இருக்கின்றது.

இளைஞர் சமூகத்தை அழித்து, அரசுடைமைகளை தீக்கிரையாக்கி நாட்டை சின்னாபின்னப்படுத்திய ஜே.வி.பியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டிணைந்து நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமாதானச் சூழலுக்கு ஆப்புவைக்க முனைகின்றனர். அத்தகையதொரு சூழலை உருவாக்க மக்கள் துணை போகமாட்டார்கள் என்பது எமது அசையாத நம்பிக்கை - என்றார். (ஒ)

ஊனமுற்றோரை அரவணைக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை10

எமது சமூகத்தில் உள்ள ஊனமுற்றோர்களை மதிக்கவும் அவர்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்காமல் அரவணைக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

யாழ்மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையத்தின் நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டக்கொடிவார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்போராட்டத்தினால் ஏற்பட்ட இழப்புக்கள் பலவகையாகும். அதிலும் அங்கவீனமடைந்தவர்களின் பிரச்சினைகள் இன்று பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இவர்களது உள்ளங்கள் புண்படும் வகையில் எவரும் கதைக்கக் கூடாது. அப்படிக் கதைப்பவர்கள் முதலில் அதனை நிறுத்தவேண்டும்.

நலிவுற்றோர் நலன்வாழ்வுத் திட்டக் கொடிவாரத்தில் இவர்களுக்கு நிதி சேகரிப்பது மட்டுமன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

இன்று மாணவர்களில் கூடச் சிலர் பலவித குறைபாடுகளுடன் கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறான மாணவர்களில் கண்பார்வையற்ற மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு 'யுனிசெவ்' நிறுவனம் இவர்களின் கல்வியை விருத்தி செய்வதற்கும் ஏனைய செயற்பாடுகளுக்குமென 5லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

கண்பார்வையற்ற மற்றும் செவிப்புலனற்ற மாணவர்கள் எவ்வித பாகுபாடும் இன்றிக் கல்வி கற்கவும் எதிர்காலப் பயமின்றி அவர்கள் கல்வியில் முன்னேறவும் பொது அமைப்புகளும் பொது நிறுவனங்களும் அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டும் - என்றார். (ம-10-6)

சாபி சிந்தனை

பயம் வேண்டாம்

பயப்படாமல் இருங்கள். உங்கள் வாழ்க்கையை பயம், பயமுறுத்தாமல் இருக்கட்டும். உங்களது மனச்சாட்சிக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்ய பிறர் தூண்டினாலோ அல்லது அறிவுரை கூறினாலோ அதைச் செய்யாதீர்கள். சிலர் வீட்டிலிருந்து புறப்படும்போது பயபக்தியுடன் நெற்றியில் இட்ட விபூதியை வீட்டை விட்டு வெளிவந்ததும் அழித்து விடுவார்கள். கடவுள் மேல் தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளியே எடுத்துச் சொல்ல எவ்வகையிலும் பயப்படக் கூடாது. தைரியமாக முன்வந்து எடுத்துச் சொல்லுங்கள். இக்காலத்தில் மக்கள் தங்களது கலாசாரத்துக்கும், ஆன்மீகத்திற்கும் ஏற்ற செயல்களைச் செய்வதற்கு பயப்படுகிறார்கள் அல்லது வெட்கப்படுகிறார்கள்.

அதேபோல நல்ல செயல்களைச் செய்வதற்கும் கூடக் கூசுகிறார்கள். பயத்தை ஒழித்துவிட்டு, உங்கள் வாழ்க்கையை ஆனந்தத்துடன் வாழ வேண்டும். உலகியலான பந்தங்களில் சிக்கி, அதனால் வாழ்க்கை பயம் நிறைந்ததாக மாறிவிட்டது. பயமற்ற ஆன்மீக வாழ்க்கை காணாமல் போய்விட்டது. இறைவனுடன் இருக்கும் போது உங்களுக்குக் கிடைக்கும் ஆனந்தம் வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. வார்த்தைகளும், எண்ணங்களும் அந்த அனுபவத்தை எடுத்துரைக்கவொண்ணாமல் தமது இயலாமையைத்தான் எடுத்துக்கூறுகின்றன.

இத்தகைய தெய்வீக ஆனந்தத்துடன்தான் நீங்கள் உங்களது தினசரி வாழ்க்கையை வாழவேண்டும். அதுதான் உண்மையான மனித வாழ்க்கை. மனிதப்பிறவி எடுத்து விட்டு மிருகத்தைப் போல் வாழக்கூடாது. உண்பது, குடிப்பது, புலனின்பங்களை அனுபவிப்பது, உறங்குவது என இவையனைத்தும் மனிதனுக்கும், மிருகத்துக்கும் பொதுவானவை. பின்னர் மற்ற ஜீவராசிகளிடமிருந்து மனிதனை எது வேறுபடுத்திக் காட்டுகின்றது? மனிதனுக்குத்தான் அறிவும் ஞானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஞானமற்ற மனிதன் மிருகத்தை விட மேலானவன் எனக் கூற முடியாது.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

பிரிட்டன் விஸா பெறுவதற்கு இனி இலேகையும் அவசியம்

இலங்கையர்களுக்கு புதிய நடைமுறை

பிரிட்டனுக்குச் செல்ல விஸாவுக்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் கைரேகைகள் இனிமேல் பதிவு செய்யப்படவுள்ளன.

சட்ட விரோதமாக பிரிட்டனுக்குள் நுழைந்து புகலிடம் கோரும் இலங்கையர்களைத் தடுக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரிட்டிஷ் குடிவரவு அமைச்சர் பெவரி ஹியூஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான 6 மாத கால விசேட திட்டமொன்று இந்த மாதம் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரிட்டிஷ் விஸாவுக்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்கள் பற்றிய விவரங்கள் முழுமையாக பதிவுசெய்யப்படுவதுடன் அவர்கள் பற்றிய தகவல்கள் பொலிஸாரினதும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்படும் என்று அமைச்சர் பெவரி மேலும் தெரிவித்தார்.

பிரிட்டனுக்குச் சென்ற பின்னர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து புகலிடம் கோருவோரை இலகுவில் கண்டறிய இந்த நடவடிக்கை வெகுவாக உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

தவறான முறையில் புகலிடம் கோருவோர் மற்றும் கடவுச் சீட்டுக்களையும் ஏனைய ஆவணங்களை அழிப்போர் புதிய நடைமுறையின் கீழ் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். (ம)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மூன்றாம் ஆண்டு நிறைவு
செஞ்சொற் செல்வர்-சிவநெறித்தவமகன் திரு.ஆறு.திருமுருகன் அவர்களது

கௌரவிப்பு விழா சிறப்பிதழ்- 10.07.2003

ஆதீன குருமுதல்வரின் அருளாசி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனது மூன்றாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மூன்று ஆண்டுகளாக தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிறைவான பணியினை ஆற்றி வருவது போற்றுதற்குரியது.

மூன்று வருடங்களாக உயரிய கல்விப்பணியை செவ்வனே ஆற்றிவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி இன்றும் மண்ணிற்கு தொண்டாற்றிய சான்றோரை கௌரவித்தல், மண்ணின் கல்வி வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் உழைத்த எம்மவரின் நினைவுப்பேருரைகளை நிகழ்த்துதல் போன்றவற்றை செய்வதன் மூலம் ஏனைய கல்வியியற்கல்லூரிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதோடு எம்மண்ணின் கலை, கலாசாரப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தும் வருகின்றது.

இப்பணியினை சிறந்தமுறையில் ஆற்றிவரும் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக. இப்பணிதொடர்ந்தும் சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்து அனைவரும் பயன்பெறும் வண்ணம் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.



சிவநெறித்தவமகன் செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன் அவர்களின்
வாழ்வும் பணியும்

முழுப் பெயர் : ஆறுமுகம் திருமுருகன்
தந்தை : கந்தையா ஆறுமுகம்
தாய் : ஆறுமுகம் சரஸ்வதி
பிறந்த திகதி : 28.05.1961
இடம் : கோப்பாய்.
கல்வி :
ஆரம்பக்கல்வி : யா/இராமநாதன் கல்லூரி
யா/இந்து ஆரம்ப பாடசாலை
இடைநிலைக்கல்வி : யா/யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
உயர்கல்வி : பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின்கல்வி : தேசிய கல்வி நிறுவகம்
தொழில் : ஆசிரியர்- 1989 இலிருந்து

நல்லாசிரியர் விருது
1) 1991 இல் யாழ். கல்வித்திணைக்களம் வழங்கியது.
2) 2002 இல் வலிகாமம் வலயம் வழங்கியது.

பணிபுரியும் பாடசாலை:
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

வகிக்கும் பதவிகள் :
1) தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர்
2) திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கம் - பணிப்பாளர்.
3) அருள்ஒளி ஆன்மீகச் சஞ்சிகை - பிரதம ஆசிரியர்.
4) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனை சபை உறுப்பினர்.

பேச்சுக்களால் சாதனைகள்
1. ஆறு.திருமுருகன் ஆன்மீகச் சொற்பொழிவு "வீடியோ நாடா" லண்டனில் வெளியீடு.
2. "Aru Thirumurugan Spritual Lectures" என்ற ஆங்கில நூல் ஆஸ்திரேலியாவில் அன்னை பவானி எனபவரால் வடிவாக்கப்பட்டுள்ளமை.
3. Aru Thirumurugan.Com என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளமை.
4. 20இற்கும் மேற்பட்ட தங்கப்பதக்கங்கள் பெற்றமை.
5. 25இற்கும் மேற்பட்ட பட்டங்கள் பெற்றமை.

பணிகள்
1. சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆறு.திருமுருகன் அறக்கொடை நிதியம் ஆரம்பித்து [illegible]ய பிள்ளைகளுக்குதவல்.
2. ஆஸ்திரேலியா சொற்பொழிவால் கிடைத்த நிதியில் ஸ்கந்தாவில்-ஸ்கந்தன் கோவில் திருப்பணி , ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் உருவச்சிலை நிறுவல்.
3. லண்டன் வாழ் மக்கள் உதவியுடன் கண்பார்வையற்ற வாழ்வுச் சிறுவர்களுக்கு ரூபா 16 லட்சம் செலவில் உடுவிலில் நிரந்தர இருப்பிடம் உருவாக்கிக் கொடுத்தமை.
4. லண்டன் சிவயோகம் அறக்கட்டளை உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் 15 லட்சம் ரூபா செலவில் நவீன கண் சத்திரசிகிச்சை நிலையம்

(மறு பக்கம் பார்க்க)

துர்க்காதுரந்தரியின் வாழ்த்துரை

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பது புறநானூற்றுப் பாடல் அடியாகும். அமரர் ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் தாம் பெற்ற பிள்ளைகள் அனைவரையும் சான்றோர் வரிசையில் முந்தி இருக்கச் செய்துவிட்டார். இவர்களிலே ஒருவரே செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள். சொல்லினாலும் செயலினாலும் மனத்தினாலும் தொண்டு பல செய்து கடமையாற்றும் ஆசிரியர் இவராவார்.

இவருடைய கற்பித்தல் பணியும், சொற்பொழிவுப் பணியும், சமூகப் பணியும் பலராலும் பாராட்டுதலுக்குரியது. தமிழ் பேசும் நல்லுலகமெங்கணும் சென்று தன் சொற்பொழிவினால் யாழ் மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தவர் இவர். ஆங்காங்கு கிடைத்த அன்பளிப்புகளை எல்லாம் இந்த மண்ணின் துயர் தீர்வதற்கு கருமமாற்றும் நிறுவனங்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து உதவியவர் இவர்.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இவரைக் கௌரவிக்க இருப்பது வரவேற்கத்தக்கதாகும். கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் தனது உயர்ந்த உள்ளத்தினால் இத்தகைய பணிகளை அவ்வப்போது ஆற்றி வருகிறார்.

கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவின் நினைவுப் பேருரைகளும் சான்றோர் கௌரவிப்பும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த மண்ணுக்கு நல்லன செய்து, நல்லன பேசி, நல்லவர்களாக நாமும் வாழ்ந்து உயர்வடைவோமாக.

"அன்பே சிவம்"

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

"மானுடம் வெல்லும் மாண்புமிகு மனிதர்"

எத்தனையோ மனிதர்கள் இப்பூவுலகில் பிறக்கின்றனர். அவர்களில் எல்லோராலும் தனது சமூகத்துக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்ய சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. சந்தர்ப்பம் கிடைத்தாலும் மனம் ஒத்துழைப்பதில்லை. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பொருத்தமாகப் பயன்படுத்தும் மனிதர்கள் ஒருசிலரே அவர்களில் ஒருவராக இன்று எம் மத்தியிலே பிரகாசித்துக் கொண்டிருப்பவர்தான் எமது மதிப்புக்குரிய செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்கள்.

திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் 1961 ஆம் ஆண்டு மதிப்புக்குரிய உபாத்தியாயர் ஆறுமுகம், ஆசிரியை சரஸ்வதி தம்பதிகளது புதல்வராகக் கோப்பாயில் பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பபாடசாலை ஆகியவற்றில் பெற்றுக் கொண்டார். இடைநிலைக் கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக உயர்வடைந்ததோடு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினை பெற்றுக் கொண்டார்.

இந்த நாட்டிற்கு பொறியியலாளர்களையும் வைத்தியர்களையும், பட்டதாரிகளையும் அளித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஊடகத்துறையினரை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, நல்ல பேச்சாளர்களை எமது மண்ணுக்கு அளிக்கவும் தவறவில்லை. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பெரிய தூண்களைக் கொண்ட பிரார்த்தனை மண்டபம் பல பேச்சாளர்களை உருவாக்கியுள்ளமை நாம் எல்லோரும் அறிந்ததே. இந்தப் பாசறையிலிருந்து பயின்று வெளிவந்து இன்று உலகறிந்த பாசறையாகத் திகழ்பவர் ஆறு.திருமுருகன் அவர்களாவர். அகில இலங்கைக் கம்பன்கழக உறுப்பினராகவிருந்து கம்பன் கழக விழாக்களில் தனது பேச்சுத் திறமையினை வெளிப்படுத்தியுள்ளார். அதுமாத்திரமல்லாமல் அவரது பேச்சுத்திறமை உலகின் பல பாகங்களிலும் ஒலித்துள்ளது. லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, சிங்கப்பூர் என்று பல நாடுகளிலும் சமயச் சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றியவண்ணமுள்ளார்.

இவரது சொற்பொழிவுகள் பல வீடியோ நாடாவாகப் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இவரது சொற்பொழிவுகளை ARUTHIRUMURUGAN.Com என்ற இணையத்தில் பார்த்தும் கேட்டும் பயன்பெறக்கூடியவகையில் லண்டன் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆஸ்திரேலியாவில் அன்னை பவானி என்பவரால் ஆறு. திருமுருகன் அவர்களின் சொற்பொழிவுகள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு "Aruthirumurugan Spritual Lectures" என்ற நூல் வடிவாக்கப்பட்டுள்ள செய்தியும் அவரின் சொற்பொழிவாற்றலுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவரது சொற்பொழிவாற்றலுக்கும் பரிசாக 20க்கு மேற்பட்ட தங்கப் பதக்கங்கள் , தங்கச்சங்கிலிகள், கணையாழிகள் அன்பர்களால் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளன. 'செஞ்சொற் செல்வர்' என்ற பட்டத்தைத் தவிர இதுவரை 25க்கும் மேற்பட்ட பட்டங்கள் உலகின் பல பாகங்களில் இருந்தும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனது சொற்பொழிவுகளுக்காகவோ அல்லது இலக்கியப் பேச்சுக்களுக்காகவோ மட்டும் அவரைக் கௌரவிக்க வேண்டுமென்று முன்வரவில்லை.

பணம்,பணம்,பணம் என்று அலையும் இன்றைய உலகில், தனது உயர் பேச்சால் தனது தன்னலமற்ற உழைப்பால்,தனது, நேர்மையான செல்வாக்கால் கிடைக்கும் முழு வருமானத்தையும் அறப்பணிகள்,பொதுப்பணிகள் ஆற்றும் ஒரு மனிதரைக் காண வேண்டுமென்றால்நாம் துணிந்து செஞ்சொற்செல்வரைக் காண்பிக்கமுடியும் காண்பித்துப் பெருமை கொள்ளவும் முடியும். இலங்கையில் மாத்திரமில்லை, உலகின் எப்பாகத்துக்குச் சென்றாலும், எக்காரியத்தைச் செய்தாலும் எவரைச் சந்தித்தாலும் அவர் ஒரே கருத்தையே கொண்டிருப்பார். எவ்வாறு அவற்றின் மூலம் அல்லது அவர்கள் மூலம் எமது சமூகத்துக்குத்தவலாம் என்பதே அதுவாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அவரைக் கௌரவித்துப் பெருமை கொள்ள முயற்சி எடுத்தமைக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. இக்காரணம் கௌரவித்தலுக்கான உரிமையையும் வழங்கிற்று. இன்று எமது மண்ணுக்கு, வேண்டிய நல்லாசிரியர்களை உருவாக்குவதற்கு பலவேறு இடர்பாடுகள் மத்தியிலும் அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்றால் அது மிகையாகும் கூற்று அல்ல. மாணவர்களின் உழைப்பு, விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பு, சமூகத்தின் அரவணைப்பு, ஆதியனைவெல்லாம் எமது

(மறு பக்கம் பார்க்க)

அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின்
வாழ்த்துப் பாமாலை
"சிவநெறித்தவமகன்"

கலையோங்கு யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி
கனிந்த மூன்றாண்டு நிறைவில்
கருதுபல் கலைக்கழகத் துணைவேந்தராய்நின்ற
கண்ணிகர்வித் தியானந்தன், பொன்
மலையோங்கு நல்லறிஞன் சந்திரசேகரம், பண்பு
மாமகன் கை லாசபதி, தம்
வாக்குமனம் காயத்தால் வான்புகுத்த பணிசெய்த
மகான் துரை ராஜா என.
நிலை யோங்கு பெரியோரை நினைந்துகௌ ரவிப்பதுடன்
நினைவினிய சொல்லின் செல்வன்
நீடுபுகழ் சிவநெறித் தவமகன் –பேரறிஞன்
நிறை ஆறு வீருமுருகனை
தலையோங்கு பணியினைய் யாராட்டி வாழ்த்திடும்
தகுநிகழ்வும் நிகழ்த்துகின்ற
தயனியக் கல்லூரித் தாயேநீ பல்லாண்டு
தபனென வாழி வாழி!

அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A.

நிகரற்ற சேவையாளன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விழாவில் சொற்பொழிவாளரும், சமூக சேவையாளருமான ஆறு.திருமுருகன் அவர்கள் கௌரவிக்கப்படுகிறார் என்ற செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

'தனம்பாத நிறைகுடம் போல' மிகுந்த தன்னடக்கமும் சீரிய மனிதநேயமும் கொண்ட ஒரு மனிதர் ஆறு.திருமுருகன்.

பல பேச்சாளர்களும், வித்தகர்களும் தங்கள் திறமைகளை வியாபார நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், எந்தவித ஆரவாரமும் இல்லாமல் ஆறு.திருமுருகன் கைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றியுள்ள பணி நிகரற்றது.

தனது பேச்சு ஆற்றலால் உலகெங்கும் தமிழர்கள் வாழும் தேசங்களுக்கு அழைக்கப்பட்டபோது அங்கெல்லாம் அவருக்கு வழங்கப்பட்ட பணத்தினை ஏற்க மறுத்து அவற்றை தனது மண்ணின் மருத்துவசேவைகளுக்காகவும், வேறுபல மனிதாபிமான பணிகளுக்காகவும் அப்படியே செலவு செய்தவர் திருமுருகன்.

சொல்லிலும் செயலிலும் பிசகாது நின்று அவர் புரியும் பணிகள் ஏராளம்.

விளம்பரம் விரும்பாத - ஆர்ப்பாட்டமில்லாத - அமைதியான சுபாவம் கொண்ட ஒரு மனிதர் திருமுருகன். இளவயதிலிருந்தே சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் நாட்டம் கொண்டிருந்த அவர், சைவத்தின் தனித்துவம் காப்பதில் வீரபுருஷராகத் திகழ்கிறார். சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு இங்குள்ள நிறுவனமாய்ப்பட்ட அமைப்புக்களால் நிறைவேற்ற முடியாமற்போன பணிகளை தனிமனித நிறுவனமாக நின்று நிறைவேற்றியவர் ஆறு.திருமுருகன். அவரைக் கௌரவிப்பதன் மூலம் யாழ்ப்பாண கல்விச் சமூகம் தன்னைக் கௌரவித்துக் கொள்கிறது என்றால் அது மிகையல்ல.

வாழ்க ஆறு.திருமுருகன்!
வளர்க அவர் சைவப் பணி!!

சு.சிவனடியான்,
நிர்வாக இயக்குநர்,
உதயன் - சஞ்சீவி.

(C/28835)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, வண்.வட மேற்கு, உயரப்புலம் பாடசாலைக்கு அருகாக, கிழக்குப் பக்கமாக நான்கு அறைகள் கொண்டதும், கார் தரிப்பிடம் கொண்டதும், சுற்றுமதில் உடையதுமான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஐ.மகேந்திரன், ஊரெழு கிழக்கு, ஊரெழு.

(20951)

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 25வயதுடைய, அச்சுவினி, 4ஆம் பாதமுடைய, கிரக பாவம் 33 1/4 (3சுற்று) உடைய மண மகளிற்கு லண்டனில் P.R. உடைய, அழகிய மணமகன் உடன் தேவை. முழு விவரத்துடன் விண்ணப்பிக்கவும். வி.இல.: 1946, உதயன், யாழ்ப்பாணம்.

(20011)

மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் 34 வயது மகனுக்கு 30 வயதிற்கு உட்பட்ட, சிவந்த பெண் தேவை. மூலக் குறிப்பு, படத்துடன் தொடர்புகொள்க. வெ.இரத்தினசிங்கம், வட்டுக்கோட்டை வீதி, சித்தன்கேணி (15/07 வரை) பின்னர் 15/1, 2ஆவது சப்பல் வீதி, வெள்ளவத்தை.

(20051)

தவறிவிட்டது

புத்தூரைச் சேர்ந்த மாணிக்கம் குமார்கிருஷ்ணன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 752341001V) வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தீபன் தையலகம், புத்தூர் (சந்தை அருகில்) என்ற முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (20020)

சட்டநாதர் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த ஜெகதீஸ்வர சர்மா உமாசுதன் என்பவருடைய தேசிய அ.அ. (இல. 741123363V), தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(20047)

பில் கிளார்க் தேவை

சிங்களம் தெரிந்திருப்பின் முன்னுரிமை.
காலை 10.00மணிக்கு முன் நேரில் வரவும்.
தொடர்பு:- **ROLEX**

குகன் விருந்தகம்

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(20041) (26-24-15-14)

31ஆம் நாள் நினைவலைகள்

ஓரடி மண்ணில்
1948
-
12
-
31

ஆறடி மண்ணில்
2003
-
06
-
10

அமரர்

ஆழ்வார்பிள்ளை ஆனந்தசபாபதி

பாலைவனத்தில் பூக்கள் மலர்ந்திடலாம்
எம்முகந்தனில் எனி மலர்ச்சியுண்டோ...?
சூரியன் திசைமாறி மறையலாம்...
தங்கள் நினைவலைகள் எம்மை விட்டு மறையுமா?
செல்வங்கள் யாம் நினைந்து நினைந்து
கதறியழ எங்ஙனம் ஐயனே....
எம்மை விட்டுச் சென்றீர்....?

தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்
ஆ.வசந்தகுமாரி, ஆ.அனோஜன்
ஆ.வாகினி, ஆ.வானதி.

மணல்தெரு, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (20050)

(25-24-19-15)

முதலாம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு
28
-
08
-
1912

இறப்பு
23
-
06
-
2002

அமரர்

கந்தையா வயித்திலிங்கம்

திதி: (11-07-2003 அமாவாசி) பூர்வபக்க திரயோதசி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்தாய்
வறுமையில் செம்மையாக எம்மை வளம்படுத்தினாய்
உன் இறை வழியாடு எம்மை செழிப்படையச் செய்துள்ளது
நீ தெய்வமாகிய ஆனி திரயோதசியில் சுற்றம் சூழ வணங்குகின்றோம்.

மனைவ: அழகம்மா,
மக்கள்: வ.பூபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர், [illegible]),
இராசசுந்தரம் (திருமலை),
அழகலிங்கம் (ஜேர்மனி),
தியாகலிங்கம் (கனடா), நவீந்திரராசா (கனடா),
திருமதி இ.ஈஸ்வரி, திருமதி சி.இராசேஸ்வரி,
திருமதி ச.பரமேஸ்வரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (19802)

தட்டான்கடவை,
பாரதி வீதி,
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை. (24-15-19)

புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் 2003 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் நாள் இன்று(10-07-2003) வியாழக்கிழமை காலை 10.35 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

அன்னை இல்லம்

எனும் புதுமனையில் குடிபுக நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மனையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி இராமன்,
மகன்மார்களான: இராமன் கந்தசாமி (நயினாதீவு)
இராமன் பரமசாமி (சுவிஸ்).

"அன்னை இல்லம்"
மகாவித்தியாலய றோட்,
கைதடி தெற்கு, கைதடி.

(20007) (24-19-15)

இலங்கை அரசு

வடக்கு - கிழக்கு மாகாண சபை

வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

கடன் இல.2880 - சி.இ. (C.E.)

தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

(நிர்மாண வேலைகள்)

கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.(I.F.B.)

ஐ.எவ்.பி. இல:- MA/NEERP/CLG/01 திகதி:- 2003.07.08

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02. மாவட்ட செயலாளர், மன்னார், இலங்கை அவர்களால் முடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதி நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03. மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான, மன்னார் மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft), காசுக் கட்டளையாகவோ (Money Order) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் அவர்களிடமிருந்து 2003.08.14 ஆம் திகதி 18.00மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னாரில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
எஸ்பிளனேட் றோட்,
மன்னார்.
தொலைபேசி இல:- 023-2232267 தொலைநகல் இல:- 023-2232269

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன் மன்னார் மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2003.08.16 ஆம் திகதி 15.00மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
கச்சேரி,
மன்னார்.

அதேதினம் 15.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

அட்டவணை

கேள்விக் குறியீட்டு இலக்கம்	வேலைவிவரம்	கேள்விப் பிணை ரூபா	கேள்வி ஆவணங்களின் விற்றுமதி ரூபா	வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம்
MA/NEERP/CLG/CB/3	மாந்தை மேற்கு பிரதேச சபை பிரதான அலுவலக கட்டடம் புனரமைத்தல்	84,000.00	800.00	08 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/7	முசலி பிரதேச சபை பிரதான அலுவலக கட்டடம் புனரமைத்தல்	84,000.00	800.00	08 மாதங்கள்
MA/NEERP/CLG/CB/8	மாந்தை மேற்கு பிரதேச சபை ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடம் புனரமைத்தல்	60,000.00	800.00	08 மாதங்கள்

07. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

வே.விஸ்வலிங்கம், மாவட்டச் செயலாளர்,
மன்னார்.
05.07.2003

(சி-28837) (26-24-19-15)

ஓம் நமோ நாராயணாய!

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய

மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

10-07-2003

பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசி

ஈழத்துத் திருப்பதியாகிய யாழ்ப்பாணம் - வண்ணை வேங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் எனும் பெருஞ் சாந்தி நிகழத் திருவருள் கூடியுள்ளது. செடிபோல் அடர்ந்த தீவினைகளைத் தீர்க்கும் திருமால் - திருவேங்கடவன் அடியார்களின் துன்பங்களுக்கெல்லாம் மருந்தானவன். "கடுலள வேங்கட நாயகஹ" எனும் வாக்கிற்கிணங்க கலியுகத்தில் மக்கள் துன்பம் நீங்க வேங்கடேசனாக அவதரித்தவர்.

அர்ச்சாரூபமான வேங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பரிவார மூர்த்திகள் சகிதம் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. 1978இல் நிர்மாணிக்கப்பட்ட பிரதான ராஜகோபுரத்தை புதுப் பொலிவுடனும். அழகுடனும் மெருகூட்டி வேங்கடனின் திருவுருவத்தை தூரத்திலேயே கண்டுகளிக்கும் கோபுரமாகக் காட்சியளிக்கின்றது. வைணவ மரபில் கோயில் என்றால் சிறப்பாக தென்னகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்தைக் குறிக்கும். அக்கோயிலை மனத்தால் கண்டுகளிக்கும் முகமாக இந்த ஆலயத்திலும் ஸ்ரீ ரங்கநாதர் சந்நிதிக்கு முன்னே தெற்கு வாயிலில் புதிதாக பஞ்சதள ராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1998 வைகாசித் திங்களில் அடிக்கல் இடப்பட்ட இந்த ராஜகோபுரம் எமது நாட்டு கட்டடக் கலைஞர்களாலும். தமிழ்நாட்டுச் சிற்பக்கலைஞர்களாலும் நன்கு உருவாக்கப்பட்டுள்ளது. "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" எனும் கூற்றுக்கிணங்க இவ்வாலயத்தில் அமைந்துள்ள இரண்டு கோபுர தரிசனங்களும் மக்களின் கஷ்டங்களை தீயினில்பட்ட தூசி போல் ஆக்குகின்றன.

1985 ஆனித்திங்கள் ரோஹினி நட்சத்திரத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து. இன்று ஆனித்திங்கள் அனுஷ நட்சத்திரமும் ஏகாதசித் திதியும் கூடிய சுபதினத்தில் மகாகும்பாபிஷேகம். ஸ்ரீதேவி பூமிதேவி சமேத வேங்கடேசவரதராஜப் பெருமாளுக்கு நடைபெறல் அவன் திருவருளே. இக் கைங்கரியம் சிறப்புறவும். அனைத்து ஜீவராசிகளும் நல்வாழ்வு வாழவும் - நாட்டில் சாந்தி நிலவவும் பெருமாளின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

"ஸர்வதா கோவிந்த நாம சங்கீர்த்தனம்"

-பிரம்மஸ்ரீ சாமி. சுந்தரேசக் குருக்கள்
(பிரதிஷ்டா பிரதம குரு)

ஆலய பிரதம குருவின் ஆசி

பரமாத்மாவாகிய இறைவன் ஜீவாத்மாவாக விளங்கும் உயிர்களுக்கு அருள் புரிவதற்கு உருவத் திருமேனி கொண்டு வீற்றிருக்குமிடம் ஆலயமாகும். ஆலயத்தில் இறைவன் வீற்றிருந்து அருள்புரியுமிடம் கருவறையாகும். கருவறையில் வீற்றிருக்கும் இறைவனின் திருவருட் சக்தியை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு அநேககிரியைகள் ஆற்றப்படுகின்றன. அவற்றில் மிக உன்னதமானது மஹாகும்பாபிஷேகமாகும். வாழ்வில் கிடைத்தற்கரிய பேறான தரிசனம் இதுவாகும்.

வண்ணைப் பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் ரக்ஷக மூர்த்தி ஸ்ரீமந் வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திருக்குட திருமஞ்சன நன்னீராட்டு விழா இன்று சிறப்புற நடைபெறுகின்றது. இந் நன்னாளிலே உலகத்திலுள்ள சகல மக்களும் சமாதான சகவாழ்வு வாழவும். சகோதரத்துவம். ஜீவகாருண்யம் > அன்பு என்றும் நீங்காது நிலைக்கவும் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

"ஹரி ஓம் நமோ நாராயணாய"

ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக்குருக்கள்
பிரதம குரு
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.
வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்

தலைவரின் வாழ்த்துரை

இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதனின் கும்பாபிஷேகப் பெருவிழா வாகும். இந் நல்ல நாளில் பகவானின் திருவருள் வேண்டி இவன் சந்நிதி நாடி குழுமி நிற்கும் சகல அடியவர்கட்கும் நல்லருள் பாலிக்கும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம். இந்தப் பெருவிழாவில் கர்ப்பக்கிருக மூர்த்தியாகிய ஸ்ரீவேங்கடேசப் பெருமாளுடன் கூடிய ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மூர்த்திக்கும் இவரின் பரிவார மூர்த்திகளாகிய ஸ்ரீரங்கநாதசுவாமி, ஸ்ரீமகாலட்சுமி, ஸ்ரீ ஆண்டாள் தேவி, ஸ்ரீசந்தானகோபாலசுவாமி, ஸ்ரீ வேணுகோபாலசுவாமி ஸ்ரீசீதாதேவி சமேத ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி நவக்கிரக மூர்த்திகள், கருடன், ஸ்ரீஆஞ்சநேயர் முதலிய மூர்த்திகட்கும் இவர்களது சந்நிதிகளுக்கும் இராஜகோபுரம் , ஸ்ரீரங்கநாத கோபுரங்களுக்கும் ஸ்தூபி அபிஷேகமும் மூர்த்திகட்கு கும்பாபிஷேகமும் நடைபெறும். சுபவேளையிதுவாகும். இதன் பொருட்டு சிறப்பு மலர் தயாரித்து வெளியீடு செய்யும் தின ஏடு பிரசுர ஸ்தாபனத்தாரின் நன்முயற்சியைப் பாராட்டுகின்றோம். இச்சிறப்பு மலர் சிறந்து விளங்கவேண்டும் என்று பணியாற்றிய அனைத்து நல்லுள்ளங்கட்கும் எமது நன்றியும் பகவானது நல்லாசியும் என்றும் உரித்தாகுக. எமது பகவான் ஸ்ரீவேங்கடவரதனை தினம் நினைந்து வணங்கும் நல்லடியார் நல்வாழ்வு பெற்று, நலம் பெற்று வாழக் கடவர். அல்லல்படும் தமிழ் இனம் அவன் அருளால் நிறைவான சமாதான சகவாழ்வு மலர என்றும் நாம் அவன்தாள் பணிவோமாக.

வாழ்க ! ஓம் நமோ நாராயணா என்னும் நாமம்.

தலைவர், நா.ஸ்ரீரஞ்சன்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்

கோயில் வரலாறு

உலகளந்த பெருமானாகி உலகை உய்விக்க வந்த திருமாலே யாழ். நகரில் வண்ணையம்பதியில் ஸ்ரீதேவி? பூமிதேவி சமேதராக வீற்றிருந்து அருள் ஆட்சிபுரியும் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆவார்.

இத்தேவஸ்தானம் 14ஆம் நூற்றாண்டில் அமையப் பெற்ற தமிழ் மன்னன் ஆகிய குணபூசணசிங்கை ஆரியன் காலத்து நெசவுத் தொழிலை விருத்திசெய்ய வந்த வைசியத் தோன்றல்கள் ஆகிய பத்மசாலிச்செட்டிப்பிள்ளைகளின் வம்சத்து உதித்த அடியார்க்கு நல்லான் என்பவரினால் வைத்து வணங்கப்பெற்ற தாம்பரவிக்கிரகமாகிய ஆதிவேங்கடேசப் பெருமானே இந்தத்தேவஸ்தானத்தின் முதன்முதற் தோற்றுவா மூர்த்தியாவார்.

இத்தேவஸ்தானமும் இதனை அண்மிய நிலப்பரப்பும் அக்காலத்து அடியார்க்கு நல்லான் வரம்பு என அழைக்கப்பெற்றது. அக்காலத்தில் இது சிறிய கோயிலாக அமையப் பெற்று. போர்த்துக்கேயரது ஆட்சிக் காலத்து கத்தோலிக்க சமய ஊடுருவலினால் இவ்வாலயம் அழியப் பெற்று. ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் பெற்று ஒரு சிறிய கோயில் உருவில் அமையப் பெற்றது. இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1835ஆம் ஆண்டளவில் இச்சாகியத்தினரின் நன் முயற்சியும். வைணவ பேற்றின் காரணமாகவும் இவர்களில் வசதி படைத்தோர் அளித்த நன்கொடைக் காணிகளின் விஸ்தீரணத் தன்மையினால் மஞ்சனக் கிணறு. மகா மண்டபம். மடைப்பள்ளி. நவக்கிரக ஆலயம் முதலியன தோன்றப் பெற்றன. கி.பி. 1840ஆம் ஆண்டளவில் ஸ்ரீமகாலட்சுமி சந்நிதி வசந்த மண்டபம். யாகசாலை முதலியனவும் கொடிஸ்தம்பம். வாகனங்கள். தீர்த்தக்கேணி முதலியன ஸ்தாபிக்கப் பெற்றும் உற்சவ மூர்த்தி தாம்பரத்தில் வார்க்கப்பெற்று. கி.பி. 1878ஆம் ஆண்டில் மகோற்சவ வைபவம் தொடங்கலாயிற்று. இதன்பின் கி.பி.1905ஆம் ஆண்டு காலத்தில் ஸ்ரீவேணுகோபாலர். ஸ்ரீராமர். சீதை. இலக்குமணன். ஸ்ரீஆஞ்சநேயர் முதலிய விக்கிரகங்கள் தாம்பரத்தில் வடிக்கப் பெற்றன.

1910ஆம் ஆண்டில் உள்கற்றுப் பிரகாரம் முழுமையும் ஓட்டினால் வேயப்பட்டது. கி.பி. 1910 முதல் 1912ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிமண்டபம் உருவாக்கப் பெற்றது. கி.பி. 1912ஆம் ஆண்டிலேயே ஸ்ரீஆண்டாள் சந்நிதியும் ஸ்தாபிக்கப் பெற்றது. 1941ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் ஒன்று மூலமூர்த்திகட்கும் பரிவார மூர்த்திகட்கும் நவக்கிரக கோயிலுக்கும் நடைபெற்றன. இதேபோன்று 1972இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1948ஆம் ஆண்டில் ஸ்ரீரங்க நாதசுவாமி இந்தியாவில் உருவாக்கப் பெற்று ஸ்தாபிக்கப்பட்டது. 1950இல் வெளி வீதியில் ஆஞ்சநேயர் கோயில் உருவாக்கப் பெற்றது.

1960இல் சித்திரத்தேர் உருவாக்கப் பெற்று அவ்வருடத்திலேயே தேரில் சுவாமி எழுந்தருளினார். 1972ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இராஜகோபுர வேலைகள் ஆரம்பிக்கப் பெற்று 1975ஆம் ஆண்டிலேயே மணிக்கோபுர வேலைகளும் நிறைவு பெற்று பெரிய காண்டாமணி பொருத்தப் பெற்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1998ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கநாதர் கோபுரவேலை தொடங்கப் பெற்று 2003ஆம் ஆண்டில் நிறைவு பெற்று இதற்குரிய கும்பாபிஷேகமும் மூலமூர்த்திகட்கும் புதிதாக உருவாக்கப்பெற்ற ஸ்ரீசந்தானகோபாலர். ஸ்ரீவேணுகோபாலர். ஸ்ரீராமர். ஸ்ரீஆஞ்சநேயர் மற்றும் பரிவாரமூர்த்திகட்கும். நவக்கிரக சந்நிதிக்கும் கும்பாபிஷேகம் நடைபெறப் பகவான் ஸ்ரீமந் வேங்கடேச வரதராஜப் பெருமாள் திருவுள்ளங் கொண்டுள்ளார். 10.07.2003 நடைபெறும் வண்ணை ஸ்ரீவேங்கட வரதனது மகாகும்பாபிஷேகத்தை கண்டுகளிக்க யாழ். குடாமக்கள் அனைவரும் பங்குபெற வேண்டும் என்பது பகவான் நாராயணனதும் எமது தேவஸ்தான மகாசபையினதும் பெருவிருப்பாகும். ஸ்ரீரங்கனது பஞ்சதளகோபுர தரிசனத்தையும் ஸ்ரீவேங்கடவரதனது மகாகும்பாபிஷேகத்தையும் கண்டு சேவிப்போருக்கு ஸ்ரீமந் நாராயணன் நன்னெறிகாட்டுவான். நன்னிதி வழங்குவான். நல்வாழ்வு அளிப்பான். நன்னலம் தருவான். நற்பேறு அருள்வான். "நாராயணன் நாமம் நாள்தோறும் ஓதுபவர் நற்கதி பெறுவர்"

"தமிழர் வாழ்வுதனைக்க தவுவு காட்டும்
ஐயா தயா நிதியே தாமோதரா கோவிந்தா
உமது பாதங்களைப் பணிகின்றோம்
ஓம் நமோ நாராயணா சரணம்
ஓம்நமோ வாசுதேவா போற்றி
ஓம் நமோ பத்மநாபா போற்றி"

வி.என்.சி.நாராயணசாமி.
முன்னாள் தலைவர் > தேவஸ்தான மகாசபை
யாழ்ப்பாணம்

சிவதர்ஷன்
(மின்சார உபகரணங்கள், எஸ்லோன் வைப் வகைகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்)
இல. 394. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம். ☎ 021-222 2417

வேல் முருகன் வணிக நிலையம்
(பிறப்பூச்சு, சுண்ணாம்பு, கலர் பவுடர்கள், கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்)
இல. 56/A. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

கஜன் மோட்டோர்ஸ்
(மோட்டார் சைக்கிள், ஓட்டோ வாகனங்கள், நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்)
இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 54. பெரிய கடை. யாழ்ப்பாணம்.
☎ 021-222 2899

போட்டோ ரவி அன் வீடியோ
இல. 139. கன்னாதிட்டி வீதி.
(லயன்ஸ் ஹோல் முன்பாக) யாழ்ப்பாணம்.
☎ 0777-110015. 0777-110106

யாழ்ப்பாண மின்னகம்
இல. 141. மின்சார நிலைய வீதி. ☎ 021-222 5766
இல. 06(34) ஸ்ரான்லி வீதி. ☎ 021-222 2353
யாழ்ப்பாணம்.

-பல்பொருள் வாணிபம்-
மகேந்திரா ஸ்ரோர்ஸ்
இல. 176/1. நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

பகவான் மருந்தகம்
இல. 221. நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். ☎ 0777-110271

அருள் கொமினிக்கேஷன்
இல. 01. பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம். ☎ 021-222-3536

தேவி அச்சகம்
இல. 114/19. நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

பானு காமென்ஸ்
இல. 233A. பிறவுண் வீதி.
(நாவலர் வீதிச் சந்தி)
யாழ்ப்பாணம்.

-பல் பொருள் வாணிபம்-
அம்பாள் களஞ்சியம்
(பிறவுண் வீதிச் சந்தி)
இல. 233/1. நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

பூரணி நகைமாடம்
(வின்ஸர் தியேட்டருக்கு அருகில்)
இல. 1/4. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். ☎ 021-222 3121

சாரங்கா நகைமாடம்
இல.157/1, இல.45 கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
☎ 021-222 2480

சீறி மீனாட்சி
தங்கமாளிகை
இல. 187. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

கங்கை
ஓவ்செற் பிரீண்டேர்ஸ்
இல. 184A. நாவலர் வீதி.
பெருமாள் கோயிலடி. யாழ்ப்பாணம்.

எரிக்கணேஷ்
(மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்)
இல. 566. ஆஸ்பத்திரி வீதி. யாழ். ☎ 021-222 2484
இல. 91. கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தி. கொக்குவில்
இல. 91. பிரதான வீதி (மருதனார்மடம் முச்சந்தி) சுன்னாகம்.

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
இல. 72(9). பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம். ☎ 021-222 2151

சுவிஸ்
விருந்தகம்
இல. 352. மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

நியூ விதுஷன் நகைமாடம்
இல. 06. கஸ்தூரியார் வீதி >
யாழ்ப்பாணம்.

அலங்கார்
நகைமாளிகை
இல. 21/7. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். ☎ 021-222 2920

சுவிஸ்ஸோ
நகைத்தொழிலகம்
இல. 44/1. யாழ் வீதி.
யாழ்ப்பாணம்.

மகாநதி புடைவையகம்
இல. 16. நவீன சந்தை. யாழ்ப்பாணம். ☎ 021-222 2552
இல. 04. நவீன சந்தை. சாவகச்சேரி.

சிவமகாலட்சுமி நகை அகம்
இல. 176V. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
கிளை:
ஸ்ரீ முருகன் நகை அகம்
சங்கரத்தைச் சந்தி. வட்டுக்கோட்டை.
ஓம் முருகன் நகை மாடம்
இல. 5. மானிப்பாய் வீதி.
கைதடிச்சந்தி. கைதடி.

சானுகா நகைமாடம் (50)
இல. 200G. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். ☎ 021-222 3700

பாலர் கல்வியை ஊக்குவிப்பதற்கான முன்பள்ளி கற்றல் உபகரணக் கண்காட்சி

யாழ்.நகரில் 'கியுடெக்' நிறுவனம் நடத்தியது

யாழ்ப்பாணம்,ஜூலை10

மனித முன்னேற்ற நடுநிலையை (கியூடெக்) முன்பள்ளி ஆசிரிய சங்கம் நடத்திய 'முன்பள்ளி கற்றல் உபகரண கண்காட்சி' கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் 'கியூடெக்' நிறுவனத்தில் இடம்பெற்றது.

கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு. கி.ஜி.ஜெயக்குமார் அடிகள், இக்கண்காட்சியை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தவராசா, வலிகாமம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் 'கியூடெக்' நிறுவன உதவியுடன் இயங்கும் முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இக்கண்காட்சி நடத்தப்பட்டது. முன்பள்ளி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் இக்கண்காட்சி, பத்து பகுதிகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

'வாழ்க்கை வட்டம்' என்ற பிரிவுக்குள் குழந்தைகளுக்குரிய விளையாட்டு உபகரணங்கள், சந்தை மற்றும் குடும்ப அத்தியாவசிய நிறைவேற்றுப் பொருள்கள் போன்றன காணப்பட்டன.

சிறார்களின் கணித அறிவினை மேம்படுத்தும் வகையிலான 'நீரும் மணலும் வட்டமும்' பிரிவு அமைக்கப்பட்டிருந்தது. இயற்கைத் தோற்றப்பாடுகள் அடங்கிய 'சூழல் வட்டமும்' அங்கு மிகத் தத்ரூபமாக அமைக்

ப்பட்டிருந்தன.

'சங்கீத வட்டம்' என்ற பிரிவினுள ரெஜிபோம், கடதாசி, நூல் மற்றும் தகரப் பேணிகள் போன்ற கழிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட பல வகையான இசைக் கருவிகளும் காணப்பட்டன.

'நடன - நாடக வட்டம்' என்ற பிரிவினுள் மிருகங்களின் தோற்றத்திலமைக்கப்பட்ட தலைக் கவசங்கள், ஆபரணங்கள் மற்றும் அலங்கார உடைகள் காணப்பட்டன. 'ஐம்புலக் கற்றல் வட்டம்' என்ற பகுதியும் காணப்பட்டது. 'தக வல் வட்டம்' என்ற பகுதி காண்போரைக் கவர்வதாக இருந்தது. 'வேலைத்தள வட்டம்' என்ற பிரிவினுள் கட்டட அமைப்பு உபகரணங்கள் காணப்பட்டன.

சிறுவர்களைக் கவர்ந்த பகுதியாக 'சித்திர வட்டம்' அமைந்திருந்தது. 'பண்பாட்டுக் கலாசார வட்டத்தினுள்' இலங்கையின் பல மத வழிபாட்டுத் தலங்களும் காணப்பட்டன.

இக்கண்காட்சி தொடர்பாக 'கியூடெக்' நிறுவனத்தின் முன்பள்ளி இணைப்பாளர், திருமதி எம்.பத்மசேகரி கூறுகையில்:- யாழ். மாவட்டத்தில் உள்ள 60 முன்பள்ளிகளைச்

சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இக்கண்காட்சிக்காக கடுமையாக உழைத்துள்ளனர். இக்கண்காட்சி மூலம் கற்றலை விரிவுபடுத்தி, பொறுமையும், நிதானமும் உள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும். சிறுவர்களுடன் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் இணைக்கும் அரிய முயற்சி இது.

- இப்படி அவர் கூறினார்.

"இக்கண்காட்சி மூலம், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை வளர்ப்பதற்கான பல அனுபவங்களை நாங்கள் பெற்றுக்கொண்டோம்." என்று முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் கூறினார்.

இது போன்ற கண்காட்சிகள் ஏனைய இடங்களிலும் நடத்தப்பட வேண்டுமென, கண்காட்சியைப் பார்வையிட வந்த பெற்றோர்கள் பலரும் கருத்து வெளியிட்டனர். (ம-8-9-ரி)

சிறப்பு மலர் தொடர்ச்சி....

மானுடம் வெல்லும்....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் நல்லாசிரியர்கள் உருவாக்கத்திற்கு உற்ற துணையாகி உதவிவருகின்றன.

இவ்வாறாக நல்லாசிரியர்களை உருவாக்க உழைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நல்லாசிரியர் விருது பெற்ற ஒருவரையே கௌரவிக்க ஏற்பாடு செய்து கொண்டமை உரிமையுணர்வால் என்பதைக் கண்டு கொள்ளவேண்டும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மாத்திரமல்ல அவரது குடும்பமே ஆசிரியப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்தான். அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த பிரதம ஆணையாளர் திருவாளர் A.C.M. இப்றாகிம் அவர்கள், யாழ்ப்பாணத்தில் தனக்கு கற்பித்த ஆசிரியர் ஒருவர் இருக்கின்றார். அவர் எங்கிருக்கின்றாரோ தெரியாது என்று பலரிடமும் கேட்டுத் தேடித் திரிந்து இறுதியில் கண்டுபிடித்துக்கொண்டார். அவர் வேறு யாருமல்ல செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் தந்தையார் ஆறுமுகம் உபாத்தியார்தான். அவர் உடனே தன்னை ஆறுமுகம் உபாத்தியாயரிடம் அழைத்துச் செல்லும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார். நானும் அவ்வாறே செய்தேன். அவர் உபாத்தியாயரைக் கண்டதும் ஓடிச்சென்று ஆரத் தழுவி கண்ணீர் மல்க "சேர், உங்களால்தானே நான் இந்நிலையில் இருக்கின்றேன்". என்று நாத்தழுதழுக்க கூறிய காட்சி இன்றும் என் மனத்திரையில் ஓடிக்கொண்டேயுள்ளது. இவ்வாறு ஆசிரியப் பணியில் உயர் பெறுமானமுடைய பணிகளை ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கின்ற பல அங்கத்தவர்களைக் கொண்டது செஞ்சொற்செல்வர் குடும்பம். இன்று அவருக்களிக்கப்படுகின்ற கௌரவம், அவருக்குமாத்திரமல்லாது அவர் குடும்பத்தினருக்கும் கௌரவத்தைத் தருவதோடு அமையாது அண்மையில் அமரத்துவமடைந்த அவரது தந்தையார் ஆறுமுகம் உபாத்தியாயரது ஆத்மாவுக்கும் சாந்தி தருவதாக அமைய எல்லாம் வல்ல நல்லூர் முருகப்பெருமான் அருள் பாலிப்பாராக!

பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

சிவநெறித்தவமகன்....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கியமை. 18 லட்சம் ரூபா செலவில் நவீன லேசர் இயந்திரம் வழங்கியமை.

5. ரூபா 15 லட்சம் செலவில் கணவனை இழந்த இளம் விதவைகளுக்கு புதிய வீடுகளை அமைத்து சிவயோகம் அன்னையர் குடியிருப்பு என்ற மாதிரிக் கிராமத்தை உருவாக்கியமை.
6. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய இடங்களில் உள்ள சைவச் சிறுவர் இல்லங்களுக்கு லண்டன் கனக துர்க்கையம்மன் ஆலயத்தின் உதவியுடன் வருடா வருடம் நிதி கிடைக்க ஏற்பாடு செய்தமை.
7. யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட புற்றுநோயாளர் கருணை நிதியம் மூலம் சுமார் 80 லட்சம் ரூபா வரை புற்று நோயாளருக்கு வழங்க ஏற்பாடு செய்தமை
8. இந்துசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஆறுமுகநாவலரின் சிலையினை தனது சொந்தச் செலவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஸ்தாபித்தமை.
9. திருகோணமலை அலஸ் தோட்டத்தில் வாழும் 1200 அகதிக் குடும்பங்கள் வழிபாட்டுக்கென ஆனந்த விநாயகர் ஆலயம் ஸ்தாபித்துதவியமை.
10. 1995 இடப்பெயர்வுடன் கிளிநொச்சியில் குடியேறிய மக்களுக்காக 20இற்கும் மேற்பட்ட நாகதம்பிரான் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வித்தமை.
11. யாழ்.பல்கலைக்கழகம், சப்ரகமுவா பல்கலைக்கழகம், ராஜரட்டைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதிகுறைந்த மாணவர்களின் கல்விக்கு உதவி பெற்றுக்கொடுத்தமை.
12. யாழ். போதனா வைத்தியசாலை நூல் நிலையத்திற்கு விலைமதிப்பற்ற நூல்கள் பெற்றுக்கொடுத்தமை.
13. கவிமணி, வீரமணி ஐயரவின், பதிப்புக்குள்ளாகாத நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு உதவியமை.
14. யாழ்ப்பாணம், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடைபெற்ற தொடர்சொற்பொழிவுக்கு ஒழுங்கப்பட்ட அன்பளிப்பு மூலம் விதவைகளுக்கு ஐந்து இயந்திரம் வாங்கி வழங்கியமை.
15. இனுவில் சாமித்தில மிகப்பெரிய நூல் நிலையமொன்றையும் நூதனசாலையையும் அமைக்க கனடா, லண்டன், நாடுகளில் வாழும் இனுவில் மக்களி உதவி பெற்றுக்கொடுத்தமை.
16. இந்துக்கல் கல்லூரிக்கு சபை உருவாக்கியமை.
17. செவிப்புலன் குறைந்த மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா மருந்துவர் உதவி பெற்று அக்குறை நீக்கும் கருவிகள் பெற்றுக்கொடுத்தமை.
18. ஆரியாலையில் யுத்த அனர்த்தங்களால் அழிந்து போன தென்னை மரமீள் நடுகைக்காக 600 தென்னங்கன்றுகளை தனது லண்டன் சொற்பொழிவு மூலம் கிடைத்த பணத்திலிருந்து பெற்றுக்கொடுத்தமை.
19. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர் வழிபாட்டிற்காக வித்தக்விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு லண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்தாரிடமிருந்து நிதி பெற்று வழங்கியமை.
20. மனவளர்ச்சி குறைந்த விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான சைவப்பாடசாலையொன்றினை அமைக்க கோண்டாவிலில் காணி ஏற்பாடு செய்து கொண்டுள்ள தற்போது ஏறத்தாழ 16 லட்சம் ரூபா திரட்டி வங்கியில் வைப்பிட்டுள்ளமை.

- வித்தியாதாசன் -

வாக்காளர் இடாப்பு மீளாய்வு ஆரம்பம்

வாக்காளர் இடாப்பில் இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யாத 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா கேட்டுள்ளார்.

இவ்வாண்டுக்குரிய வாக்காளர் பட்டியல் மீளாய்வுப் பணிகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

அதற்கு ஏதுவாக தற்போது நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள் யாழ். செயலகம், மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மேற்படி அலுவலகங்களில் பட்டியல்களைப் பார்வையிடலாம்.

கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பிரதிகள் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் பணிமனையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதில் பதிவு செய்யப்படாத 18 வயதுக்கு மேற்பட்ட இரு பாலாரும் யாழ்மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளர் அலுவலகம் ஆகியவற்றில் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் -

அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறுவோர் அடுத்த வருடம் வரை தமது பதிவுகளை மேற்கொள்ள முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-5-30)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம்	489
திகதி	08.07.2003

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4040608-4054890

35 39 40 49

வெற்றி இலக்கங்கள்
லக்கினம்
கும்பம்
ஜக்பொட் பரிசு
ரூபா. 1,685,100/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,398,800/-

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் தொகை	பரிசுத் தொகை(ரூ.)	மொத்தப் பரிசுத் தொகை(ரூ.)
1 இல	319,573	10	3,195,730
2 இலக்கங்கள்	29,359	20	587,180
1 இல + லக்கினம்	29,079	30	872,370
2 இல + லக்கினம்	2,681	100	268,100
3 இலக்கங்கள்	791	500	395,500
3 இல + லக்கினம்	66	5,000	330,000
4 இலக்கங்கள்	04	100,000	400,000
4 இல + லக்கினம்	-	1,685,100	-
மொத்தம்	381,553	-	6,048,880

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,048,880/-

தொடர் இல. 5040634க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 11ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4047821-8-57
4041126-4-29
4043788-7-09
4054467-6-93
4042888-6-97

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

மருந்துகளின் பெயர்களை தமிழில் தவறின்றி எழுதுவதற்கு ஒரு முயற்சி

ஆங்கில மருந்துகள் இரசாயனப் பொருள்களால் ஆனவை. தேவையான வேளையில் தேவைப்படும் அளவு மருந்தைப் பயன்படுத்தினால் மருந்துகள் நோயை நீக்கும். தேவையற்ற மருந்தையோ அல்லது தேவைக்கு அதிகமான மருந்தையோ அல்லது ஒரு மருந்தைப் பயன்படுத்த வேண்டிய முறைக்குப் புறம்பான முறைகளில் பயன்படுத்தினாலோ அது உடலுக்குக் கேட்டை ஏற்படுத்தும்.

சிபார்சு செய்யப்பட்ட மருந்தின் பெயரை வாசித்து விளங்கிக்கொள்வதில் ஏற்படும் தவறு காரணமாக வேறு மருந்தைப் பயன்படுத்த நேரிடுவதும் சதையினுள் ஏற்றுவதற்குச் சிபார்சு செய்யப்படும் (im) ஊசி மருந்து இரத்தக் குழாயினுள் (IV) தவறுதலாக ஏற்ற நேரிடுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். பயிற்சி பெறாத பணியாளர்கள் பணி புரியும் இடங்களிலேயே இத்தகைய தவறுகள் ஏற்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் மருந்தகங்கள் (Pharmacy) பெருகிவரும் அதே வேளையில் பதிவு பெற்ற மருந்தாளர்களின் தொகை அருகிவருகின்றது. இதனால், மருந்தாளர் பயிற்சி பெறாதவர்களும் தமிழ்மொழி மூலம் கல்வி கற்றதனால் ஆங்கிலமொழியில் போதிய அறிவு பெறாதவர்களுமானவர்களையே மருந்தகங்கள் மருந்து விற்கும் பணியில் ஈடுபடுத்துகின்றன. அதேவேளையில் சில வைத்தியர்கள் எழுதும் எழுத்துக்கள் (HAND WRITING) தெளிவற்றதாக அமைவதுமுண்டு.

இவர்கள் தொடுத்தெழுதும் முறையைப் பயன்படுத்தி மருந்துரைச் சீட்டுகளை(PRESCRIPTION) ஆங்கில மொழியில் எழுதி வழங்கும்போது, மருந்தகங்களில் உள்ள பணியாளர்கள் அவற்றை வாசித்து எழுதப்பட்டுள்ள மருந்தை இனங்காண்பதற்குச் சிரமப்படுகிறார்கள். மருந்துச் சீட்டுக்களில் எழுதப்பட்டுள்ள மருந்துகளின் பெயர்களின் முதலாவது எழுத்து எப்பொழுதும் வாசிக்கக்கூடியதாக அமைவதால், அந்த எழுத்தை அடிப்படையாக வைத்து மருந்துகளைத் தேடும்போது, அதே முதல் எழுத்துக்களைக் கொண்ட பல மருந்துகள் அலுமாரியில் இருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில், தவறான மருந்து விற்கப்படுவதுண்டு. இத்தவறு ஏற்படாது தடுப்பதற்கு மூன்று வழிகளே உண்டு. அதில் ஒன்று வைத்தியர்கள் தெளிவாகத் தனித்தனியான ஆங்கில எழுத்துக்களில் மருந்துகளின் பெயர்களை எழுதுதல் ஆகும். ஒருவரின் எழுதுமுறை (HAND WRITING), ஒரு பழக்கம்(HABIT) எனவும், அது மாற்ற முடியாதது எனவும், கையெழுத்துத்துறை வல்லுநர்கள் (GRAPHOLOGYSTS) கூறுகிறார்கள். எழுத்தில் தனிக் கவனம் செலுத்தி எழுதினால் அந்த வேளையில் மாத்திரம் தெளிவாக எழுதமுடியும். ஆனால், நோயாளரில் கவனம் செலுத்தி, அதிக நோயாளருக்கு மருந்து எழுதும்போது வழமையான எழுத்திலேயே எழுதப்படுவிடும். எனவே வைத்தியர்கள் அனைவரும் தெளிவான தனித்தனி எழுத்துக்களில் மருந்துச்சீட்டு எழுதிக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்க முடியாது. இரண்டாவது வழி, எல்லா மருந்தகங்களிலும் பயிற்சியும் பதிவும் பெற்ற மருந்தாளர் பணிபுரிவது-

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது போதிய பயிற்சியும் பதிவும் உடைய மருந்தாளர்கள் இல்லை. அரசாங்க வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்குத் தேவையான மருந்தாளர்கள் அரசினால் இரண்டு வருட பயிற்சி அளிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். ஆனால், வெளிவாரியாக ஒருவர் மருந்தாளர் பதிவுபெற விரும்பினால், அவர் இரண்டு வருடங்கள் பதிவு பெற்ற மருந்தாளர் ஒருவரின் கண்காணிப்பில் பயிலுநர் பணி புரிந்த பின்னரே, மருந்தாளர் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எனவே, உடனடியாகப் பெருமளவு மருந்தாளர்களை உருவாக்க முடியாது, மூன்றாவது வழி மருந்து விற்பவர்களுக்கு விளங்கத்தக்கதாக அவர்கள் இலகுவாக வாசிக்கத்தக்கதாக அவர்களது தாய்மொழியான தமிழில் மருந்துச்சீட்டுக்களை எழுதும் நடைமுறையை ஏற்படுத்துவது. இதுவே செயற்படுத்தக் கூடியதாகும்.

ஆனால்,தமிழ் நெடுங்கணக்கில் B,F,G,அ,ஆ போன்ற ஒலிவடிவங்களுக்குரிய எழுத்துக்கள் இல்லாமையால் தமிழில் மருந்துகளை எழுதும் போது அவை விகாரமடையலாம். (உதாரணம் 'FEPANIL'- பெப்பானில், COBAXINE- கோபாக்சின், BACHEGEL- பாக்கேக்செல், ALGIPAN- அல்சிப்பான், IMIGRAN- இமிக்றான்)

ஆதலால் மருந்துப் பெயர்களின் பெயரைச் சரியாக எழுதுவதற்குத் தேவையான எழுத்துக்களைச் சேர்த்து மருத்துவத் தேவைக்கென தனியான மருத்துவத் தமிழ் நெடுங்கணக்கு உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

தென் ஆசியாவின் முதலாவது ஆங்கில வைத்தியக் கல்லூரியை மானிப்பாயில் நிறுவித் தமிழ்மொழி மூலம் வைத்தியக்கல்வி போதித்துப் பல வைத்தியர்களை உருவாக்கி, உலக அரங்கில் யாழ்ப்பாணத்தினதும் தமிழினதும் பெருமையை உயர்த்திய டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன் வைத்திய நூல்களைத் தமிழில் எழுதிய வேளையிலேயே மருத்துவத்துறைச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பு [TRANSLITERATION] செய்வதற்கு முயன்றார். ஆனால் சில ஒலி வடிவங்களைச் சரியாக எடுத்துக்காட்ட எழுத்துக்கள் இல்லாததால் வைத்தியத் துறைச் சொற்களை எழுத்துப்பெயர்ப்பு (ஒலிபெயர்ப்பு) செய்ய அவரால் முடியவில்லை. தமிழ்மொழியில் இல்லாதிருக்கும் ஒலி வடிவங்களான ஹ,ஷ, ஸ,ஜ ஆகிய எழுத்துக்களை வடமொழியிலிருந்து பெற்று அவற்றையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட கலப்புத் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களும் பிறமொழி எழுத்துக்களை ஒலிபெயர்ப்புச்செய்யப் போதாதிருப்பதாக டாக்டர் கிறீன் குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழியில் ௮, ௮:, ௬,௩,ச,ஃ சர்வதேச ஒலிக் குறியீடுகளுக்குரிய ஒலிவடிவங்களையும் வரிவடிவங்களையும் சேர்த்துக் கலப்புத் தமிழ் நெடுங்கணக்கை விரிவாக்கம் செய்து தருமாறு அக்காலத்திலிருந்த தமிழ் வல்லுநர்களை அவர் வேண்டினார். அக்காலத்தமிழ் வல்லுநர்கள் இவரது கோரிக்கையை உதாசீனம் செய்தனர். இதனால், டாக்டர் கிறீன் கலைச்சொல ஆக்கம் என்ற பெரும் முயற்சியை ஆரம்பித்து வைத்து, தமிழ்க்கலைச் சொற்களைப் பயன்படுத்தி தமிழில் வைத்திய நூல்களை எழுதினார். இவரைப் பின்பற்றி பலரும் தாம் விரும்பியவாறு பல்வேறு கலைச்சொற்களை ஆக்கி, விஞ்ஞான நூல்களை தமிழில் வெளியிட்டு வருகின்றனர். வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்துவதனால், ஒரு நாட்டில் வெளியிடப்படும் நூல்களை இன்னொரு நாட்டில் வாழும் தமிழர்கள் பயன்படுத்த முடியாதுள்ளது. இதற்கு அட்டவணை Iஇல் சில உதாரணங்களைக் காணலாம்.

ஆங்கிலச் சொற்கள்	இந்தியக் கலைச்சொற்கள்	இலங்கைக் கலைச்சொற்கள்
SCIENCE	அறிவியல்	விஞ்ஞானம்
SKULL	கபாலப்பெட்டி	மண்டையோடு
SPINAL CORD	தண்டுவடம்	முண்நாண்
CIRCULATORY SYSTEM	இரத்தமண்டலம்	குருதிச்சுற்றோட்டத்தொகுதி
ARTERY	தமனி	நாடி
VEIN	சிரை	நாளம்
TRICUSPID VALVE	மூவிதள் வால்வு	முக்கூர்வால்வு
CAPILARIES	தந்துகி	மயிர்த்துளைக்குழாய்
DIABETES	சர்க்கரைநோய்	நீரிழிவு
HYPERTENSION	இரத்தக்கொதிப்பு	அதிக இரத்த அழுத்தம்

அட்டவணை I

டாக்டர் கிறீன் மேற்கொண்ட மேற்படி முயற்சி பற்றி அண்மையில் அமரத்துவமடைந்த நோயியல் நிபுணர் டாக்டர் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா என்னிடம் தெரிவித்திருந்தார். அத்துடன் மருத்துவத்துக்கான தமிழ் நெடுங்கணக்கொன்றை உருவாக்கித்தருமாறும், மருத்துவர் சங்கத்தில் அதனை சமர்ப்பித்து நடைமுறைப்படுத்த உதவுவதாகவும், அவர் என்னிடம் தெரிவித்தார். தற்போது அவர் அமரத்துவமடைந்துவிட்டார். அவரது எண்ணப்படி மருத்துவத் தேவைக்கான தமிழ் நெடுங்கணக்கொன்றை உருவாக்கியுள்ளேன்.

இந்த மருத்துவத் தமிழ் நெடுங்கணக்கு, தமிழ் நெடுங்கணக்கில் சில சீர்திருத்தங்களைச் செய்தும், சில வரிவடிவங்களைச் சேர்த்தும் ஆக்கப்பட்டுள்ளது. த, ற போன்றவை வெவ்வேறு சொற்களில் வெவ்வேறு ஒலிகளைக் கொடுப்பது, சரியான மருந்து எழுதப்படுவதற்கும், எழுதப்பட்ட மருந்து சரியாக விற்கப்படுவதற்கும் இடையூறு செய்யும் என்பதால் ஒரு எழுத்து ஒரு ஒலியை மாத்திரம் ஒலிக்கத்தக்கதாக அமைவதற்கான ஏற்பாடுகள இதில் செய்யப்பட்டுள்ளன.

இதிலுள்ள மேலும் சில சிறப்பு அம்சங்கள் வருமாறு:-

அ, ஆ என்னும் இரு புதிய உயிர் ஒலிவடிவங்கள் சேர்க்கப்பட்டு, அவற்றுக்கு முறையே அா, அாா வரி வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உயிர்க்குறில்களுடன் ா சேர்த்து உயிர் நெடில்கள் ஆக்கப்பட்டுள்ளன.

ஔகார உயிரிலும், ஔகார உயிர்மெய்களிலும் ஔகாரக் குறியீடாக மெய் எழுத்து 'ள' அமைந்து, வாசிக்கும் போது ஏற்படும் மயக்கம் நீக்கப்பட்டுள்ளது. இதற்காக 'ள' நீக்கப்பட்டு ௌ, ஔகாரகுறியீடாகப் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு உகர, ஊகாரக் குறியீடுகள் பயன்படுத்தப்படுவதால், பெரும் எண்ணிக்கையில் இருக்கும் உகர, ஊகார உயிர்மெய்கள் நீக்கப்பட்டு

ச.ஆ.கோபாலமூர்த்தி.

பொதுவான உகரக்குறியீடு ஒன்றும், ஊகாரக் குறியீடு ஒன்றும் சேர்த்து அமைக்கப்பட்டுள்ள உகர, ஊகார உயிர்மெய்கள் பிரதியீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் நெடுங்கணக்கில், 'ற்' என்னும் மெய் வரிவடிவத்திற்குரிய ஒலி வடிவமாக it அமைந்திருக்க அதனுடன் தொடர்பற்றவகையில் அதனால் ஆக்கப்படும் உயிர்மெய்கள் ra, ra:, ri, ri:, ru, ru:, re, re:, ro, ro:, rou என்னும் ஒலிவடிவங்களைக் கொண்டிருக்கின்றன. வைத்தியத் தமிழ் நெடுங்கணக்கில் இப்பொருந்தாத் தன்மை நீக்கப்பட்டுள்ளது. இதற்காக, t 'ஒலிவடிவத்தைக் கொண்டுள்ள 'ற்' மெய்எழுத்தின் ஒலிவடிவம் r ஆக மாற்றப்பட்டுள்ளது. புதிதாக t ஒலி வடிவம் ஒதுக்கப்பட்டு அதற்கான வரிவடிவமாக :ற ஆக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து t ஒலிவடிவ உயிர்மெய்கள் ஆக்கப்பட்டுள்ளன.

வல்லின எழுத்துக்கள் சில சில இடங்களில் இடையின ஒலிகளை வெளிப்படுத்துவதால் இவை மருந்துப் பெயர்களைத் துல்லியமாக, அவற்றின் ஒலிபிறழாது வாசிப்பதற்கு இடையூறாக இருக்கின்றன. இதனால் மெல்லின, இடையின, ஒலிகளை வெளிப்படுத்துவதற்குத் தனியான எழுத்துகள் ஆக்கப்பட்டுள்ளன. உதாரணம்: - th (Hard) 'த' வரிவடிவத்தைக் கொண்டிருக்க இடையினத்திற்கான வரிவடிவமாக ':த' ஆக்கப்பட்டுள்ளது.

✦

மருத்துவத்தமிழ்நெடுங்கணக்கு

		ʌ	a:	æ	æ:	i	i:	u	u:	e	e:	ai	ɔ	ɔ:	ʌu
		அ	அா	அா	அா	இ	இா	உ	உா	எ	எா	ஐ	ஒ	ஒா	ஒ0
k	க்	க	கா	கா	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கெ0
ġ	:க்	க	:கா	:கா	:கா	:கி	:கீ	:கு	:கூ	:கெ	:கே	:கை	:கொ	:கோ	:கெ0
h	ஹ்	ஹ	ஹா	ஹா	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹெ0
ŋ	ங்	ங	ஙா	ங	ங	ஙி	ஙீ	ங	ங	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙெ0
tʃ	ச்	ச	சா	சா	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	செ0
ʃ	ஷ்	ஷ	ஷா	ஷா	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷெ0
s	ஸ்	ஸ	ஸா	ஸா	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸெ0
gn	ஞ்	ஞ	ஞா	ஞா	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞெ0
d	ட்	ட	டா	டா	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டெ0
nn	ண்	ண	ணா	ணா	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணெ0
θ	த்	த	தா	தா	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தெ0
ð	:த்	:த	:தா	:தா	:தா	:தி	:தீ	:து	:தூ	:தெ	:தே	:தை	:தொ	:தோ	:தெ0
nθ	ந்	ந	நா	நா	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நெ0
p	ப்	ப	பா	பா	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பெ0
b	:ப்	:ப	:பா	:பா	:பா	:பி	:பீ	:பு	:பூ	:பெ	:பே	:பை	:பொ	:போ	:பெ0
f	:ஃ	:ஃ	:ஃா	:ஃா	:ஃா	:ஃி	:ஃீ	:ஃு	:ஃூ	:ஃெ	:ஃே	:ஃை	:ஃொ	:ஃோ	:ஃெ0
m	ம்	ம	மா	மா	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மெ0
j	ய்	ய	யா	யா	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யெ0
dʒ	ஜ்	ஜ	ஜா	ஜா	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜெ0
t	ர்	ர	ரா	ரா	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரெ0
r	ற்	ற	றா	றா	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றெ0
tt	:ற்	:ற	:றா	:றா	:றா	:றி	:றீ	:று	:றூ	:றெ	:றே	:றை	:றொ	:றோ	:றெ0
l	ல்	ல	லா	லா	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லெ0
v	வ்	வ	வா	வா	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வெ0
ll	ழ்	ழ	ழா	ழா	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழெ0
l	ள்	ள	ளா	ளா	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளெ0
n	ன்	ன	னா	னா	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னெ0

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒலி வடிவங்களுக்கான வரிவடிவங்கள்.(எழுத்துக்கள்).

14 உயிர் எழுத்துக்களுக்கும் 27 மெய்யெழுத்துக்களுக்கும் உரிய ஒலி வடிவங்கள் ஆங்கில அகராதிகளில் பயன்படுத்தப்படும் ஒலிக்குறியீடுகளால் (phonetic symbols) காட்டப்பட்டுள்ளன

குறியீடுகள்: ˘ உகரக்குறியீடு, ¯ ஊகாரக்குறியிடு, ˆ சாய்வுக்குறியிடு.

தொடர்புகொள்ள வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை10

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுடன் பின்வருவோர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திருமதி ரேவதி கிருஷ்ணராஜா, 223,6ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

திருமதி ஜானகி பிரான்சிஸ்,15 மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

திருமதி அமலராணி குருநாதன், 64/1, புகையிரத நிலைய வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

திருசெல்லையா பிரான்சிஸ், 219,6ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

செல்வி மலர் பௌலிஸ், 91/9, டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்,

திருமதி தியாகராஜா தனலக்ஷ்மி, கல்வளைபிள்ளையார் கோவில் தெற்கு வீதி, சண்டிலிப்பாய்.

(ஓ)